14ஆவது வருடத்தில்....

# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059    416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை    மாதமிருமுறை    இலவசம்

வாசித்துவிட்டீர்களா?

உலகத் தமிழோசை

7வது இதழ்

சிறப்பு விலை

$1.50 மட்டுமே

வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)



HomeLife GTA Realty Inc.

1711 McCowan Rd. Suite #206, Toronto

Direct: 416.315.9397

OFFICE: 416.321.6969

Sales Agents Welcome

நதி 14    MAY 15, 2004    பாலம் 10

## யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட நாள்

## மே 31, 1981



## இந்தியாவின் 14ஆவது தேர்தலில் காங்கிரஸ் கட்சி அமோக வெற்றி. அடுத்த பிரதமர்?



## விக்டோரியா தினம்

## மே 24, 2004





# நம்பி உழைக்கணும் தம்பி

*கடினம் என்றே எதையும் எண்ணி*
*கலங்கி விடாதே தம்பி!*
*துடிப்பும் உறுதி உழைப்புமிருந்தால்*
*தொடரும் முயற்சி வெல்லும்!*
*மேட்டில் இருந்தே பாயும் நீரும்*
*மேலே நோக்கிச் செல்லும்!*
*நாட்டில் உலகில் நடப்பவை யாவும்*
*நொடியில் நம்மைச் சேரும்*

*புறாவிடு தூதில் தொடக்கிய தகவல்*
*பரிவர்த் தனையின் வளர்ச்சி!*
*இரவோ பகலோ எல்லா நேரமும்*
*ஈமெயில் தொடர்பின் எழுச்சி!*




• •


இன்று உலகுக்கு வேண்டியது ஆதிக்கமோ கடும் வெறியுமல்ல. சுதந்திரமாகவும் நட்புணர்வுடனும் வாழ வழிகாட்டும் சமாதான ஆர்வமே.

போர்கள் மூளாத உலகில் விஞ்ஞான வளர்ச்சி மனிதனுக்கு நம்பிக்கை ஊட்ட வல்ல மகத்தான சாதனையாகும். கடல்களை அகழ்ந்து ஆழமாக்க முடியும். கற்களை உருக்க முடியும். பாலைவனத்தைப் பூத்துச் செழிக்கச் செய்ய முடியும். உலகில் இருந்து பஞ்சம், பிணி, இன்னலை விரட்ட முடியும்.

## துரித பணமாற்றுச் சேவை



வவுனியா -கொழும்புச்
சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை
ஆகிய இடங்களுக்கும்
கடுகதியில் பணம்
அனுப்புவதற்கு



மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221

Singapore Communication

Since 1991


FAMILY PLAN $40.00/ M/ 2 PHONES

• 100 min Daytime to share/ Weekend Free
• upgraded for Free Evening with more Min more min.
• 2500 Min Free between 2 phones
• V/M, C/C & C/C Free
• Buy one phone as low as 49.99 and 2nd Free***
• 2 Year Contract
• 40.00/M
• 350 Min Daytime Free

More Info. Call: 416-740-5292

5010 Steeles Ave. W.,Unit 17ABC-(Kipling & Steeles)

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்



வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் அறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்

திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.




Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

• Auto
• Home
• R.R.S.P
• Life
• Disability

• Mutual Fund
• Group Insurance
• Child Education
• Travel & Business



416.321.1515 • 905.294.2429

4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/ Sheppard)

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு



WALK IN DENTAL CLINIC

9.00A.M - 9.00P.M

Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்

416-264-3232

3150 Eglinton Ave. E.

Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

## அருள் விருந்து

- அடக்கம் பழகுமளவு மனது தூய்மையடைகிறது.
- அறிவு ஒற்றுமையை உண்டுபண்ணுகிறது. அறியாமை வேற்றுமையை வளர்க்கிறது.
- நீங்கள் பெருமைபடைத்த மக்கள் என்பதை ஒவ்வொரு செயலிலும் நிரூபித்துக் காட்டுங்கள்.
- தொண்டன் ஒருவன் கௌரவத்தில் கருத்து வைப்பதில்லை. அவன் அன்பில் கருத்து வைத்தவன் ஆகிறான்.
- சமய அனுஷ்டானங்களைப் பற்றிப் பெருமிதமாகப் பேசுபவர் பலர். அதைப் பழக்கத்தில் கொண்டு வருபவர் மிகச்சிலரே.
- பிறரை வெறுக்கின்றவன் விரைவில் ஒழிந்து போவான். பிறரை வெறுத்து வாழ்ந்திருந்த சமுதாயம் உலகில் இல்லை.
- பிறரைத் துன்புறுத்துவது சான்றோன் செயலன்று. ஆனால் தீயவரைத் தோற்கடிக்கும் வல்லமை அவர்களிடத்திருந்தாக வேண்டும்.
- மனிதர்களுக்கிடையில் உள்ள வித்தியாசம் அவர்கள் படைத்துள்ள பொருள்களைப் பற்றியதல்ல, அவர்கள் அடைந்துள்ள மனபரிபாகத்தைப் பற்றியதாம்.

வீடு வாங்க, விற்க...

ரவி பரமு

வீட்டுப் பிரதிநிதி



DIRECT: 416.262.4176

OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.

1711 McCowan Rd. Suite #206, Toronto



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்யும் தொழிலில், வெற்றி பெற

## பெரி. முத்துராமன்

* உங்கள் மகன் பள்ளிக்கூடத்துக்கு உங்களை அழைத்தால் உங்களால் செல்ல முடிகின்றதா?
* உங்கள் மனைவியிடம் "சீக்கிரம் வீட்டுக்கு வருகிறேன்" என்று சொல்லும் போது அந்த உறுதிமொழியைக்காக்க முடிகின்றதா?
* வாரத்தில் நான்கு நாட்களாவது உடல் பயிற்சி செய்ய முடிகின்றதா?
* முன்னதாகவே திட்டமிடாமல், உங்களுக்குத் தேவைப்படும் போது, தொலைபேசிகளிலிருந்து தூர இருக்க முடியுமா?
* வாரஇறுதி நாட்களைக் குடும்பத்துடன் மகிழ்வுடன் செலவிட நேரமிருக்கின்றதா?

இந்தக் கேள்விகளில் இரண்டுக்காவது "இல்லை" என்று பதில் அளித்தால், கொஞ்சம் வாழ்க்கையின் வேகத்தைக் குறைத்துக் கொள்ளல் நலம். வியாபாரம், குடும்பம் என்று இரண்டுக்குமே நேரத்தை ஒதுக்க முடி கின்றதா? இல்லையேல் அதற்குக் கொடுக்கும் விலை கற்பனைக்கு எட்டாததாகவும் இருக்கக் கூடும். உதாரணத்துக்கு ஒத்துழைக்க மறுக்கும் இதயம், உடைந்த குடும்பங்கள், புறக்கணிக்கப்பட குழந்தைகள் என்று எதுவாக வேண்டுமானாலும் இருக்கக்கூடும்.

உங்கள் குடும்பத்தையும், வியாபாரத்தையும் சரியான முறையில் நிர்வகிக்கத் தெரிந்து வைத்திருந்தால் உங்கள் வாழ்க்கை முழுமையாகிறது. முழுவாழ்வும் வெற்றி பெறு கின்றது. முழுவாழ்வும் வெற்றி பெறும்போது வியாபாரமும் வெற்றி பெறுகின்றது. தன்னையும், பிறரையும் போற்றுதல், எதையும் முறையாக அணுகுதல், செய்தல், நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தும் திறமை, தக்கோரிடம் பணியைக் கொடுத்து, பொறுப்பைத் தான் ஏற்கும் பண்பு ஆகியவை வாழ்வை வெற்றி மிக்கதாக ஆக்கும்.

தக்கோரிடம் பணியைக் கொடுப்பது என்று பார்க்கையில் என்று பார்க்கையில், உங் களுக்கு உதவ நல்ல ஒரு நிதித் திட்டமிடலாளரைப் பார்த்தல் நலம். அவர் உங்கள் கனவுகளையும், பயன்களையும் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். ஓரளவுக்கு உங்கள் வியாபாரம், குடும்ப வாழ்க்கை என்ற இரண்டையுமே சமன் படுத்தித் திட்டமிட அவர் உதவலாம். நிதித் திட்டமிடலாளர் உங்கள் தனிப்பட்ட சூழ் நிலையை ஆராய்ந்து உங்களுக்கு ஏற்ற நிதித்திட்டமிடலைத் தரக்கூடும். உதாரணத்து க்கு

* எதிர்பாரா ஆபத்துக்களை (ரிஸ்க்- Risk) எதிர்கொள்ளல். (இன்சூரன்ஸ் -Insurance)
* பண நிர்வாகம்
* முதலீடுகள்
* சொத்துக்களைப் பெருக்குதல்
* வரிகள்



உங்கள் தேவைகளும் சூழ்நிலைகளும் மாறிக் கொண்டேயிருக்கின்றது. அவற்றை உங்கள் நிதித் திட்டமிடலாளர் உங்களோடு அமர்ந்து ஆய்வு செய்கின்றார். அவரை ஒரு குடும்ப வைத்தியருடன் ஒப்பிடலாம். குடும்ப வைத்தியர், சில சூழ்நிலைகளில் தனது நோயாளியை, மருத்துவ நிபுணர்களிடம் அனுப்புவதைப் போல, நிதித்திட்டமிடலாளரும், உங்களை வழக்கறிஞர், கணக்காளர் போன்றவர்களிடம் அனுப்பலாம்.

உங்கள் தேவைகளும், சூழ்நிலைகளும் எவ்வாறு ஒவ்வொரு கால கட்டங்களிலும் மாறுகின்றது என்பது ஒரு சுவையான விடயம். அதன் ஒரு பகுதியை கீழே காண்போம்.

*30 வயது வரை*

* தக்க வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொள்கிறீர்கள்.
* உங்கள் கல்வி, வருமானத்தைத் தரத் துவங்குகின்றது.
* உங்கள் வருமானம் பெரும்பாலும் பாதுகாப்பானதாக உள்ளது.
* ஆனாலும் எதிர்பாரா சூழ்நிலைகளுக்கு என கையில் எப்போதும் ரொக்கத்தை வைத்திருக்க விரும்புகிறீர்கள்.
* உங்கள் குழந்தைகளின் கல்விக்குத் திட்டமிட விரும்புகிறீர்கள்.
* உங்கள் குடும்ப நலன் கருதி ஆயுள் மற்றும் பிற காப்புறுதிகளை எடுக்க விழைகிறீர்கள்.

*30இலிருந்து 45 வயது வரை*

* உங்கள் வாழ்க்கையின் குறிக்கோளைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பிக்கின்றீர்கள்.
* உங்கள் தொழிலில் "ரிஸ்க்" எடுக்கத் தயாராக இருக்கிறீர்கள்.
* வீடு மற்றும் பிற கடன்களைப் பெற்றிருக்கிறீர்கள்.
* ஏற்கனவே எடுத்திருக்கவில்லை என்றால் இப்போது ஆயுள் காப்புறுதி எடுக்கவிழைகிறீர்கள்.
* உங்கள் குழந்தைகளின் கல்விக்கு என மேலும் அதிகத் தொகையைச் சேமிக்க விழைகிறீர்கள்.
* உங்கள் ஓய்வு பெறுதலைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்குகிறீர்கள்.

*45இலிருந்து 55வயதுவரை*

* நீங்கள் இதுவரை வாழ்ந்த வாழ்வை ஆராயத் தொடங்குகிறீர்கள்.
* குழந்தைகள் சுதந்திரமாகச் செயல்படத் துவங்கலாம்.
* உங்கள் வீட்டுக்கடன்களைப் பெரும்பாலும் திருப்பிச் செலுத்தியிருப்பீர்கள்.
* உங்கள் கவனம் உங்கள் உடல் ஆரோக்கியத்திலும், ஓய்வு பெறுதலைப் பற்றியுமே இருக்கின்றது.
* வாழ்க்கையை பயணங்களின் மூலம் அனுபவிக்க விழைகிறீர்கள்.
* ஒரு மரண சாசனம் தேவை என்றும் தோன்றுகின்றது.

*55 வயதுக்கு மேல்*

* நீங்கள் சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க முயற்சிக்கிறீர்கள்.
* மகிழ்வான நிறைவான வாழ்வே இப்போதைய இலட்சியம்.
* பெரும்பாலும் கடன்களிலிருந்து விடுதலை பெற்று விட்டீர்கள்.
* குழந்தைகள் உங்களை விட்டுப் பிரியத் தலைப்படுகிறார்கள்.
* உங்களுக்குப் பின் உங்கள் சொத்துக்கள் போன்றவற்றைப் பற்றி ஏற்கனவே திட்டமிட்டிருக்கவில்லை என்றால் இப்போது திட்டமிடுகிறீர்கள். ஏற்கனவே திட்டமிட்டிருந்தால், தேவைப்படும் பட்சத்தில் மாற்றியமைக்கிறீர்கள்.
* நீரோடை பெற்று, தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் நிரந்தர வருமானத்துக்கு ஏற்பாடு செய்து கொள்ளவிழைகிறீர்கள்.
* அதற்கு மேலும் பணம் இருக்குமானால் நல்ல செல்வத்தை அடுத்த சந்ததிக்கும் பெருக்கி வைக்க முயற்சி எடுக்கிறீர்கள்.
* எல்லாவற்றுக்கும் மேலாக மற்றவர்களுக்குக் கொடுப்பதிலும், தானதருமங்கள் செய்வதிலும் மகிழ்ச்சியடைகிறீர்கள். அதற்காகவும் திட்டமிடுகிறீர்கள்.

இவ்வாறு ஒவ்வொரு கால கட்டத்திலும் மாறிக் கொண்டேயிருக்கும் உங்கள் வாழ்க்கையில் நிதித் திட்டமிடலாளர் அந்தந்த காலகட்டத்துக்கும் அடுத்து வரவிருக்கின்ற காலகட்டத்துக்கும் தேவையான நிதியைச் சேமிக்கவும், பாதுகாக்கவும், பெருக்கவும் உதவுகின்றார். அவர் உங்கள் வருமானம் மற்றும் சொத்து போன்றவற்றைப் பற்றி முதலில் ஒரு ஆரம்பக் கணிப்பு செய்கின்றார். உங்களுடன் அமர்ந்து உங்கள் கனவுகள் எவ்வளவு நியாயமானவை. எவ்வளவு தூரம் நனவாகும் சாத்தியம் வாய்ந்தவை என்று மதிப்பீடு செய்து உங்கள் கனவுகளை நனவாக்கத் திட்டம் வகுக்கின்றார். உங்களுக்கே, உங்களுக்கு என்று ஒரு நிதித்திட்டமிடலையும் தயாரிக்கின்றார். அதை உங்களோடு அமர்ந்து ஆண்டு தோறும் ஆய்வு செய்கின்றார். நீங்கள் பாடுபட்டுச் சேர்ந்த பணம் பயன் உள்ளதாக மாற அவர் உங்களுக்கு உதவுகின்றார்.

திட்டமிடலாளர் தருபவை ஆலேசனைகள் தான் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். எத்தகைய திட்டமிடலாளரை நீங்கள் தேர்ந்தெடுத்திருகிறீர்கள் என்பதும், அவருடன் ஒவ்வொரு கால கட்டத்திலும் நீங்கள் எவ்வாறு இணைந்து பணிபுரிகிறீர்கள் என்பதும் உங்களுக்குச் சிறந்த வெற்றியைத் தரக்கூடும்.


பெரி. முத்துராமன் ஒரு நிதித்திட்டமிடலாளர்.
அவருடன் தொடர்பு கொள்ள தொலைபேசி எண் - 416-430-0623
மின் அஞ்சல்: perrii@successbizsolution.com.

நாளையை இன்றே தொடுவோம்

* உங்கள் ஓய்வூதியத்தைப் பாதுகாக்க விரும்புகிறீர்களா?
* உங்களுக்கு பெரிய வருத்தங்கள் வருமானால் RRSP யிலிருந்து தான் வருமானத்தைப் பெற வேண்டுமா?




* பெரிய வருத்தங்கள் வருவதனாலேயே 48 சதவீட்டுக் கடன்கள் கட்ட முடியாமல் போயிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? (மரணத்தினால் 2 சத வீதக் கடன்களே கட்ட முடியாமல் போயிருப்பதாக புள்ளி விபரம் கூறுகின்றது)



உங்கள் கவலை எதுவானாலும் இலவச ஆலோசனை பெற அழையுங்கள்:
பெரி. முத்துராமன், MBA, M.COM., PFPC
Financial Planner & Consultant
416-430-0623 / Cell: 416-278-2026

HOME INSPECTION





> வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள...
> வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...


நம்பிக்கையான, நவீன, நிபுணத்துவ சேவைக்கு
ந. தயாபரன்
Certified Inspection Specialist

> NEW & RE-SALE HOME INSPECTIONS
> PROBLEM ANALYSIS & SOLUTIONS

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered
• Professionals Serving the GTA • On site Report

24 / 7 - Toll Free - 1 866 373 3315
416.727.8336



SMILE

• BUSINESS PLANS
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE

RK CONSULTANTS

PL. CALL: 905-887-7457 / 905-751-7537
24 hrs, 365 days



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPLEMORE AUTOMOTIVE


**உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்**

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

* Detailing
* Motor Shampoo
* Interior Shampoo
* Exterior Wash
* Waxing
* Repairs
* Safety Certification
* Overall Maintenance
* Under Coating
* Rust Proofing

**416-285-4998**
**435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6**

SPECIAL




# பழைய வாகனங்கள் வாங்கும்போது

தற்போது உள்ள வாகனங்களுக்கான காப்புறுதிகளின் நிலையில் ஏராளமான கனடியன் மக்கள் பழைய வாகனத்தையே வாங்க விரும்புகின்றனர். Car Insurance இன்று குறையும் நாளை என்று எதிர்பார்த்ததன் முடிவு எல்லோருக்கும் ஏமாற்றத்தை மட்டும் தான் தருகின்றதே



தவிர நல்ல ஒரு முடிவையும் தருவதாக இல்லை. அதனால் தற்போது வாகனம் வாங்க உள்ள அனைவரும் Car Insurance ஐ கருத்தில் கொண்டு அதன் தேவைகளுக்கு ஏற்றபடி வாகனத்தை வாங்குவது சிறந்தது என்பது உண்மையாகும். அப்படி ஒரு நிலை உருவாக்கிய பட்சத்தில் ஏராளமானவர்கள் பழைய வாகனங்களை வாங்குவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதில் உள்ள மிகப்பெரிதும் கடினமானதுமான வேலை என்னவெனில் பழைய வாகனங்களை எங்கு வாங்குவது என்பது தான். பழைய வாகனங்களை பெரிய Dealer களிடம் வாங்கும்போது சிலவேளைகளில் சிறிய தொகையை கூடுதலாக செலுத்த வேண்டியது உண்மை என்றாலும், நீங்கள் வாங்குவது பழைய வாகனம் என்பதால் அவ்வாகனம் விபத்தில் சிக்காத வாகனமாக இருக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் எத்தனை பேர் பாவித்து உள்ளனர் என்பதும் ஒரு முக்கியமான விடயமாக கருதவேண்டும்.

அதை விடுத்து விலையில் மட்டுமே கவனத்தை செலுத்துவது என்பது ஒரு நல்ல விடயமாக இல்லை. வாடகைக்கு விடப்பட்ட வாகனங்களையும் யாரும் விருப்புவதில்லை. அத்துடன் வேறு மாகாணங்களில் இருந்து இந்த மாகாணத்துக்கு கொண்டு வரப்பட்ட வாகனத்தையும் தவிர்த்தல் நல்லது. இங்கு ஓர் உண்மை சம்பவத்தை குறிப்பிட விரும்புகிறேன். ஒருவர் ஒரு தனியார் வாகன விற்பனை நிலையத்தில் ஒரு வாகனத்தை அந்த வாகனம் விபத்தில் சிக்கி கொண்டது தெரிந்தும் குறைந்த விலை என்பதால் வாங்கி அதை வேறு ஒரு இடத்தில் கூடிய விலைக்கு Trade பண்ணி பின்னர் சட்டத்தின் பிடியில் அகப்பட்டு ஏராளமான பணத்தை அவர் இழந்தது போல் நீங்களும் இழக்காதீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு: சோதீஸ்
Action Honda - 416-704-1179


## Special — Rogers Cable

Installation Offer

எப்பவும் இல்லாத விஷேட சலுகை இந்த மாதம் மட்டுமே முந்திடுவீர்!!

No Connection Fee. No Contract

**Rogers**
**Hi Speed Internet**
2 Months Free
Save upto **$110**

TV - **Cable Service**
1 st month free
3rd Month $15 Rebate
Save up to **$120**

கனடாவின் முன்னணி நிகழ்ச்சிகளை வழங்கும் **Tamil Vision (TVI)** **பார்க்க ஆர்வமா?** அழைத்த அதே நாளில் உங்கள் இல்லம் வந்து இலவச இணைப்பை ஏற்படுத்தி தருகிறோம்.
மீண்டும் உங்களிற்காக ஒரு மாத காலத்திற்கு இலவசம்.
Computer Truble Shoot Specialist தமிழில் தொடர்புகளுக்கு எந்நேரமும்
அழையுங்கள் **Sanjay - 416-315-2917**


மத்திய ரொறொன்ரோ நீரிழிவு கல்வித்திட்டம்

## இலவச நீரிழிவு வகுப்புக்கள்

*இப்பொழுது உங்கள் சமூகத்தில் நீரிழிவைப்பற்றி அறிந்து கொள்ள இது ஓர் அரிய சந்தர்ப்பம்.*
*திகதி: வைகாசி மாதம் 12, 19, 26, 2004 நேரம்: மதியம் 1.00 மணிதொடக்கம் மாலை 3.00 மணிவரை*
*இடம்: Flemingdon Park Library (Auditorium நூல் நிலையம்) 29 ST. Dennis Drive Toronto*
*மேலதிக தகவல்களுக்கும் பதிவு செய்வதற்கும் நீங்கள் அழைக்க வேண்டியது*
*சாரு 416-429-4991 Ext 276*

சிவயோகபுரம் நடேசராலய

## புனருத்தாரண திருப்பணி நிதி உதவி

*தேவாரப் பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில், கன்னியா வெந்நீருற்றுக்குச் செல்லும் பாதையில் சிவயோகபுரம் நடேசராலயம் அமைந்துள்ளது. சிவயோக சமாஜ ஸ்தாபகர் ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா அவர்களின் தனி முயற்சியாலும், சமாஜ தொண்டர்களின் அயரா உழைப்பினாலும் அழகிய இவ்வாலயம் அமைக்கப்பட்டு, 1972 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இவ்வாலயம் அமைந்த நிலப்பரப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ந. இ. இராஜவரோதயம் அவர்கள் சிவயோக சமாஜத்திற்கு தர்ம சிந்தனையுடன் அளித்ததாகும். மக்களுடைய வழிபாட்டுக்குரிய தலமாக பொலிவு பெற்று நின்ற இவ்வாலயம், 1983 ஆம் ஆண்டு வன்செயல்களால் சேதமடைந்தது. கர்ப்பக் கிரகத்தோடு விநாயகர், முருகன், மகாவிஷ்ணு, வைரவர், நவக்கிரகங்களுக்குரிய பரிவார மூர்த்திகளும் முற்றாகவே தரைமட்டமாகின. அத்தோடு மணிக்கோபுரம், சுற்று மதில்கள், மடங்கள் என்றிவையும் அழிக்கப்பட்டன.*

*இன்றைய சூழலில் சுவாமிஜியின் அருட்பணி மீண்டும் இவ்வாலயத்துடனூக துலங்கி, மக்களைச் சென்றடைய வேண்டும், என்ற பேரவா சுவாமிஜியின் அடியார் மனதில் நிறைந்துள்ளது. இத்திருப்பணியை நிறைவு செய்ய பல இலட்சங்கள் தேவைப்படுகிறது. ஈழத்தில் ஒரேயொரு நடேசராலயமாய் விளங்கும் இவ்வாலயத் திருப்பணியைத் பூர்த்தி செய்வது நம் ஒவ்வொருவரதும் தலையாய கடமை என்பதை நினைத்து, ஆரம்பித்துள்ள இப்பணி தடைப்படாமல் தொடர இயன்ற பொருளுதவி தந்துதவுமாறு தர்ம சிந்தையுள்ள அன்புள்ளங்களை பணிவன்புடன் வேண்டுகின்றோம்.*

*Sivayoga Samajam, Main Street, Trincomalee, Sri Lanka,*
*REGD No: HA/4/2/8, Tel: 026-222-2049*
*Bank A/C: Hatton National Bank, Trincomalee Branch*
*C/A No: 401018*


## New Condo Grand Open House 16.05.2004

## Mississauga

1 Bed Room, 2 Bed Rooms Available from 165,000


### Building & Common Areas

- 28 story Condominium residence
- Elegant 2-story lobby with 24 Hrs concierge
- Grand Ovation Club Recreation & Fitness center with indoor swimming pool, Sauna, Exercise Aerobics Center, Party Room with Kitchen, Billiard Lounge, Card Room & Much More

விபரங்களுக்கு அழையுங்கள் சிவசர்மா
416.666.5515

### Suite Features & Finishers

- 6 Premium appliances included
- Refrigerator, Stove, dishwasher & Microwave
- Exquisite, full Granite countertop in kitchen
- Grand Ovation signature cabinetry in Kitchen & bathroom
- Cultured marble countertops in bathroom
- White full capacity, stacked washer & dryer
- and much more.......



Shiva Sharmah
Sales Representative

Homelife GTA
Realty Inc., Real Estate Broker
1711 McCowan Road, Suite 206,
Scarborough ON, M1S 3Y3

**Cash Back Bonus**

| Price Ranges | Bonus |
|---|---|
| Under $ 169,900 | $ 1000.00 |
| $ 170,000 -$199,000 | $ 2000.00 |
| $ 200,000 - 299,999 | $ 2500.00 |
| $ Above $300,000 | $ 3000.00 |




**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண மனிதனின் சிந்தனையிலிருந்து...



## மேற்குலகின் அநாகரிகங்கள்



உலகில் நாகரிகத்தின் முன்னோடிகள், ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள் மனிதத்தை போற்றுபவர்கள் என்று எவ்வளவு தான் மேற்குலகத்தினர்களைக் கூறிக்கொண்டாலும் நாகரிகம் என்ற போர்வையின்கீழ் அநாகரிக ஊழல்கள் செய்வதில் இலங்கை, இந்தியா போன்ற வறிய நாடுகளில் நடைபெறும் அரசியல், மற்றும் அதிகார ஊழல்களுக்கு எந்தவகையிலும் தாம் குறைந்தவர்கள் அல்ல என்பது கனடாவிலும், அமெரிக்காவிலும் நிரூபணமாகி உள்ளது.



சில மாதங்களுக்கு முன் Toronto Star பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. அதில் Metro Toronto Police பிரிவில் நியாயமற்ற வகையில் அதிகப்படியாக சிறுபான்மை இனத்தவர்கள் மீது சில (வெள்ளை இன) பொலீஸ் அதிகாரிகள் Racial Profiling என்ற வகையில் அநீதியாக குற்றம் சுமத்தப்படுவதாகவும், இடைஞ்சல்கள், தொந்தரவுகள் கொடுக்கப்படுவதாகவும் சொல்லப்பட்டு இருந்தது. அந்த அறிக்கை வெளிவந்த உடனேயே உண்மையை கண்டறிந்து சிறுபான்மை இனத்தவர்கள் பாதிக்கப்படுகின்றார்களா, அப்படி நடைபெறாமல் எந்தவகையில் தடைசெய்யலாம் என்பது பற்றி எல்லாம் சிந்தித்து செயற்படாமல் பொலிஸ் அத்தியட்சகர் Julian Fantino முதலாக பெரும்பான்மையினருக்கு குடைபிடிக்கும் பொதுஜன ஊடகங்கள், சில அரசியல்வாதிகள்வரை துள்ளிக் குதித்து Toronto Star வேண்டுமென்றே பழி போடுவதாகவும் குறை கூறி பொலீஸ் சேவை சபை பல மில்லியன் டொலர்களுக்குமான நட்டம் கேட்டு வழக்கும் தொடர்ந்தது. ஏதோ ஒட்டு மொத்தமாக அத்தனை பொலீஸ் அதிகாரிகளும் அரிச்சந்திரர்கள் என்ற வகையில் நடந்து கொண்டனர். Toronto பொலீஸ் பிரிவின் இன்றைய நிலை என்ன? ஓய்வு பெற்ற முன்னாள் பொலீஸ் அத்தியட்சகரின் புதல்வர்கள் முதலாக பல பொலீஸ் அதிகாரிகள் லஞ்ச ஊழல்கள் மற்றும் அதிகார துஸ்பிரயோகம், திருடர்களுக்கு உடந்தையாக இருந்தமை என்றும் மற்றும் பல அதிகாரிகள் போதைப்பொருள் கடத்தலில் கையாடல் செய்தமை என்றும் பலவகை அவதூறுகளுக்கும் ஆளாகி இருக்கின்றனர். அன்றைய Toronto Star பத்திரிகையில் வெளியான அறிக்கையை மனிதத்தன்மையுடன் அணுகி, பாதிக்கப் பட்ட சிறுபான்மை இன மக்களின் மனதுக்கு ஆறுதல் கூறி, பொலீஸ் பிரிவில் களை எடுக்கத் தெரியாத அல்லது விரும்பாத தலைவர்களின் நாகரிக ஊழல்களுக்கு விழுந்த அடியாக அவர்களது போக்கில் மாற்றத்தை உண்டுபண்ணட்டும்.



1988ஆம் ஆண்டு March மாதம் 17ஆம் திகதி ஈராக்கின் வடபிராந்தியத்தில் வாழுகின்ற Kurdis (இந்தியா) இன மக்கள் மீது அமெரிக்காவின் கைங்கரியத்தில் கிடைத்த நச்சு வாயுவை செலுத்தி குழந்தைகள், சிறுவர்கள், தாய்மார்கள் உட்பட 6000ற்கும் மேற்பட்டவர்கள் கொடூரன் சதாம் குசெய்ன் கொன்று குவித்த அதே தினத்தில் சதாமின் மாளிகையில் நடந்த அனர்த்தங்களை கண்டும் காணாமல் வாய்பொத்தி சதாமிற்கு சலாம் வைத்து கைகொடுத்து விருந்துண்டவர் இந்நாள் அமெரிக்காவின் பாதுகாப்பு மந்திரி டொனால்டு ரம்ய்பெஸ்ட் (Donald Rumsfeld). ஈராக் மக்களை சதாமிடம் இருந்து காப்பாற்றுவதற்காக என்ற



பெயரில் கொடுத்த போலீஸ், சரண் அடைந்த ஈராக் போர் வீரர்கள் அமெரிக்காவின் சிறைக்கூடங்களில் கேவலப்படுத்தியதாக வெளிவந்த புகைப்படங்கள் அமெரிக்காவின் அநாக ரிக, நாகரிகங்கள் உலகிற்கு பறை சாற்றுகின்றன. ரம்ஸ்பெல்ட்டின் மந்திரி பதவிக்கு ஆப்பு வைக்கக் கூடிய வகையில் அது இன்று வளர்ந்துள்ளது. மத்தியகிழக்கு நாடுகளில் இருந்த கொஞ்ச நஞ்ச நடுநிலையாளர்களையும் அமெரிக்காவின் மீது வெறுப்பு கொள்ள வைத்து விட்டன அந்த புகைப்படங்கள் என்று பலர் கருத்துக் கூறினாலும் மத்தியகிழக்கு நாடுகளில் வாழுகின்ற கிறிஸ்தவ, யூதமதத்தை சார்ந்தவர்கள் தவிர இஸ்லாமியர்களுக்கிடையே அமெரிக்காவின் செயல்களுக்கு நடுநிலைமையுடன் ஆதரவு கொடுப்பவர் கள் இல்லை என்றே கொள்ளலாம். எனவே சிறைச்சாலை புகைப்படங்கள் புதிதாக அமெரிக்காமீது வெறுப்பை அதிகரிக்க வைக்கப்போகின்றது என்று எண்ணுவதில் பயன் இல்லை.

சிறைச்சாலை நிகழ்வுகளுக்கு பதிலடியாக இறைவனின் பெயரால் தலையை கொய்து விடுகின்றோம் என்ற பெயரில் அமெரிக்க தொழிலாளி




ஒருவரின் தலையை வெட்டி இறைவனின் பெயரால் காட்டுமிராண்டித்தனத்தில் இருந்து வெளியே வரப்போவதில்லை என்று உறுதி செய்தவர்கள் இருக்கும் வரை இந்த உலகிற்கு விடிவே இல்லை எனலாம். சிந்தனை தொடரும்

பரம் ஜி.
ஒரு சாதாரணமனிதன்


**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**

LARGE INDOOR PUBLIC
CAR AUCTION

EVERY WEDNESDAY EVENING
STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM

100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL

> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
> V.W., & OTHER FOREIGN
& DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

WEEKLY CASH BUYERS DRAWS OPEN
MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM
FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM
1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ON.

CIA PUBLIC AUTO AUCTION & SALES
416 - 242 - 5052
www.cialeasing.com



வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

Param Gnana
Sales Representative
HomeLife GTA
Realty Inc.

www. themathuram.com

Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)

HomeLife Higher Standards
themathuram.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Go..... முரளி Go....!!
# விளையாட்டுத் தகவல்கள் - 145

### கிரிக்கெட்

"எத்தனை தடைகள் வந்தாலும் அத்தனையையும் மீறி "தமிழ் வீரன்" என்று நாம் பெருமைப் படக்கூடிய முத்தையா முரளிதரன் குறைந்த வயதில் குறைந்த டெஸ்ட் ஆட்டங்களில் உலக சாதனையை நிலைநாட்டி புதிதாக சாதனைகளை படைத்துக் கொண்டு போகின்றார். இவருடைய பெயர் கிரிக்கெட் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுகின்றது. இனி கிரிக்கெட் உலகில் முரளிதரனுக்கு "வானமே எல்லை"......!!!



1992 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா நாட்டிற்கெதிராக தனது முதல் டெஸ்ட் பிரவேசத்தை ஏற்படுத்திய முரளி, சிறீலங்கா அணி பெற்ற பல வெற்றிகளுக்கெல்லாம் முதல் காரணகர்த்தாவாக திகழ்ந்துள்ளார். இதனால் தான் இன்று உலகின் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களில் முதல் இடத்தில் முரளிதரன் இருக்கின்றார்.

முக்கியமாக முரளிதரன் தனது பந்து வீச்சு மூலம் தென் ஆபிரிக்காவிற்கே சிம்ம சொப்பனமாக திகழ்ந்துள்ளார். இதுவரை பெற்ற 521 விக்கெட்டுகளில் 337 விக்கெட்டுக்களை சிறீலங்கா மண்ணில் வைத்து கைப்பற்றியுள்ளார். இதில் 77 விக்கெட்டுக்களை தென் ஆபிரிக்காவிற்கு எதிராகவும் 69 விக்கெற்றுக்களை இங்கிலாந்து, சிம்பாவேக்கு எதிராகவும், 51 விக்கெட்டுக்களை இந்தியாவிற்கு எதிராகவும், 50 விக்கெட்டுக்களை அவுஸ்திரேலியாவிற்கு எதிராகவும் சாய்ந்துள்ளார். இதில் குறிப்பாக சிம்பாவே அணித் தலைவர் Grant Flower ஐ 10 தடவைகள் விக்கெட்டில் அவுட்டாக்கி உள்ளார்.

இவர் 600 ....700....800....!!! விக்கெட்டுக்களை தாண்டி யாருமே அசைக்க முடியாத புதிய உலக சாதனைகளை ஏற்படுத்த "விளம்பரம் பத்திரிகை" இரசிகர்கள் சார்பில் வாழ்த்துகின்றோம்.

### உலக சாதனையைவிட உலகக்கோப்பை வெற்றியே பெரியது - முரளிதரன் பேட்டி

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை படைத்ததைவிட, 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பையில் சிறீலங்கா அணி பெற்ற வெற்றிதான் மிகப்பெரிய சாதனை என்று இலங்கை அணி- முரளிதரன் தெரிவித்துள்ளார்.

ஹாராரேயில் நடைபெற்று முடிந்த சிம்பாப்பே அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் போது டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர் என்ற புதிய உலக சாதனையை முரளிதரன் படைத்தார். மே.இ. தீவுகளைச் சேர்ந்த முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான கர்ட்னி வால்ஷ் ஏற்படுத்தி இருந்த 519 விக்கெட்டுக்கள் சாதனையை முரளிதரன் முறியடித்தார். முதல் டெஸ்டின் முடிவில் 521 விக்கெட்டுகளுடன் முரளிதரன் இருக்கிறார். இந்த நிலையில் தன்னுடைய உலக சாதனையைவிட அணியின் உலகக்கோப்பை வெற்றிதான் மிகப்பெரியது என்று முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முரளிதரன் அளித்த பேட்டியில் குறிப்பிட்டு இருப்பதாவது, "உலகக்கோப்பை என்பது முற்றிலும் வித்தியாசமானதாகும். அதை யாராலும் மறக்க முடியாது. அது ஒரு அபாரமான விஷயம். எனவே என்னுடைய இந்த தனிப்பட்ட சாதனையைவிட உலகக்கோப்பை வெற்றியே மிகப் பெரியதாகும். அதே சமயம் உலக சாதனை என்பதும் எனக்கும் பெரிய விஷயமாகும். ஏனெனில் இந்தியா, அவுஸ்திரேலியாவைப் போல பெரிய நாடு இல்லை. எனவே இந்த உலக சாதனையானது நல்ல பெயரை பெற்றுத்தரும். இந்த உலக சாதனையானது நிறைய இளைஞர்களை கிரிக்கெட் விளையாட்டின் பக்கம் ஈர்க்கும். என்றாவது ஒரு நாள் நாமும் இந்த நிலைக்கு உயர்வோம் என்ற நம்பிக்கையை இளம் வீரர்களுக்கு கொடுக்கும்" என்ற முரளிதரன் கூறினார்.

இந்த சாதனை குறித்து முரளிதரன் மேலும் கூறுகையில், "உலக சாதனை புரிந்திருப்பது என்பது ஓர் அற்புதமான விஷயம். 519 விக்கெட்டுகளில் நான் இருந்த போது மிகவும் பதற்றமாக இருந்தேன். ஏனெனில் விக்கெட்டுகளை வாசும், சோய்சாவும் அடுத்தடுத்து வீழ்த்திக் கொண்டு இருந்தனர். ஒரு நிலையில் சிம்பாப்வே அணி 18/5 என்ற நிலைக்கு தள்ளப்பட்டது. இவர்கள் இருவருமே தொடர்ந்து பந்து வீசி இருந்திருந்தால் இன்னிங்சை அவர்களே முடித்திருப்பார்கள். ஆனால் கேப்டனிடம் தான் பந்து வீசுவதை நிறுத்திக் கொள்வதாகவும், முரளிதரனை பந்துவீச அழைக்கும்படி வாஸ் கூறியதால் எனக்கு விக்கெட்டை வீழ்த்தும் வாய்ப்பு கிடைத்தது. இதற்காக கேப்டன் அத்தபத்து, வாஸ் இருவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்" என்று கூறினார். 1998 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக ஓவலில் நடைபெற்ற போட்டியில் 221 ஓட்டங்களைக் கொடுத்து 16 விக்கெட்டுகளை வீழ்த்தியதே தனது சிறப்பம்சம் என்றும் கூறிய முரளிதரன், தன்னுடைய கிரிக்கெட் வாழ்வில் மறக்க முடியாத நபராக முன்னாள் கப்டன் அர்ஜுனா ரணதுங்காவை குறிப்பிட்டார். தன்னுடைய கிரிக்கெட் வாழ்வு சிறப்பாக நடைபெற எத்தனையோ பேர் உதவி இருந்தாலும் ரணதுங்காவிற்கு ஸ்பெஷல் இடம் இருப்பதாக முரளிதரன் தெரிவித்தார்.

**எஸ். கணேஷ்**

### ஸ்பெயின் உதைபந்தாட்ட லீக் தொடர்கிறது ரியல் மாட்ரிட் தோல்வி

ஸ்பெயின் கால்பந்து லீக் சாம்பியன் பட்டத்திற்கான போட்டியில் ரியல் மாட்ரிட் அணி, மல்லோர்கா அணியிடம் தோல்வி அடைந்தது. ஸ்பெயின் கால்பந்து லீக் சாம்பியன் பட்டத்திற்காக நடைபெற்று வரும் லீக் போட்டிகளில் நட்சத்திர வீரர்கள் நிறைந்த ரியல் மாட்ரிட் அணி 2-3 என்ற கோல் கணக்கில் மல்லோகாவிடம் தோல்வி அடைந்தது.

இதன் மூலம் ஸ்பெயின் கால்பந்து லீக் பட்டத்தை வெல்லும் வாய்ப்பு வாலென்சியா அணிக்கு அதிகமாகி உள்ளது.

ரியல் மாட்ரிட் அணியின் இந்த தோல்வியானது வாலென்சியா அணிக்கு ஸ்பெயின் கால்பந்து லீக்பட்டத்தை ஏறக்குறைய பெற்றுத் தந்துவிட்டது.

சமீபகாலமாக ரியல் மாட்ரிட் அணி மோசமான தோல்விகளை தழுவி வருவது குறிப்பிடத்தக்கது. நட்சத்திர வீரர்கள் பலரைக் கொண்ட ஒரே அணி என்ற பெருமை உடைய ரியல் மாட்ரிட் அணி கடைசியாக விளையாடியுள்ள 5 லீக் போட்டிகளில் 4 இல் தோல்வி அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதனால் ஒரு சாம்பியன் பட்டம் கூட வெல்லாமல் இந்த சீசனை முடிக்கும் மோசமான நிலை ரியல் மாட்ரிட் அணிக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த சீசனில் ரியல் மாட்ரிட்டின் விளையாட்டு வருத்தமளிப்பதாகவும், போட்டிகளில் வெற்றி பெற நல்ல முயற்சிகள் எடுத்தாலும் இவை மோசமானதாக முடிந்து விட்டதாகவும் ரியல் மாட்ரிட் அணியில் விளையாடும் ரொனால்டோ குறிப்பிட்டுள்ளார். மற்றொரு போட்டியில் வலிமை குறைந்த செல்டா டிவிகோ அணியிடம் தோற்றதன் காரணமாக லீக் பட்டியலில் 3வது இடத்தில் இருக்கும் பார்சிலோனா கால்பந்து கிளப் அணியும் லீக் சாம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்பை இழந்தது.

லீக் சாம்பியன் பட்டம் கையை விட்டுப் போய்விட்டதாக பார்சிலோனாவின் பயிற்சியாளர் பிராங்க் ராஜ்கார்ட் தெரிவித்துள்ளார்.

35 போட்டிகளில் விளையாடி வாலென்சியா 74 புள்ளிகளையும், நடப்பு சாம்பியனான ரியல் மாட்ரிட் 36 போட்டிகளில் விளையாடி 70 புள்ளிகளையும், 36 போட்டிகளில் விளையாடி பார்சிலோனா 69 புள்ளிகளையும், ஷடிபோர்டிவோ 65 புள்ளிகளுடனும் உள்ளன.

மல்லோர்கா அணியின் சார்பாக சாமுவேல் ஈடோ 2 கோல்களையும், அலெஜான்ட்ரோ கேம்பானோ ஒரு கோலையும் அடித்தனர். ரியல் மாட்ரிட் அணியின் சார்பாக டேவிட் பெக்காம், பிகோவும் தலா ஒரு கோல் அடித்தனர்.

### German Open Tennis
### காயம் காரணமாக விலகினார் வீனஸ்

### சாம்பியன் பட்டம் வென்றார் மொரேஷ்மோ

ஜெர்மன் ஓபன் டென்னிஸ் போட்டியின் இறுதிப்போட்டியில் இருந்து வீனஸ் வில்லியம்ஸ் விலகியதை தொடர்ந்து, அமெலி மொரேஷ்மா சாம்பியனாக அறிவிக்கப்பட்டார்.

பேர்லினில் நடைபெற்றுவரும் ஜெர்மன் ஓபன் டென்னிஸ் போட்டியின் இறுதிப்போட்டியில் இருந்து கணுக்கால் வலியால் வீனஸ் வில்லியம்ஸ் விலகினார். இதனால், இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்ற மற்றொரு வீராங்கனையான பிரான்சின் அமெலி மொரேஷ்மோவுக்கு சாம்பியன் பட்டம் வழங்கப்பட்டது. நேற்று முன்தினம் நடைபெற்ற கரோசியாவைச் சேர்ந்த இளம் வீராங்கனையான கரோலினா ஸ்பெரம்ற்கு எதிரான அரையிறுதிப் போட்டியின் போது வீனஸ் வில்லியம்ஸ்சின் கணுக்காலில் காயம் ஏற்பட்டது. இந்த போட்டியில் 2-6, 6-3, 6-4 என்ற செற் கணக்கில் வீனஸ் வில்லியம்ஸ் வெற்றி பெற்றார். இருப்பினும் வீனஸ் வில்லியம்ஸ் இறுதிப்போட்டியில் விளையாடுவது சந்தேகத்திற்கு இடமாக இருந்தது. இதனால், இடது கணுக்காலில் வீனஸ் வில்லியம்ஸ் கட்டுப் போடப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் இறுதிப்போட்டியில் இருந்து வீனஸ் வில்லியம்ஸ் விலகியதால் மொரேஷ்மோ சாம்பியன் பட்டம் வென்றார். அரை இறுதிப்போட்டியில் அமெலி மொரேஷ்மோ 6-2, 6-0 என்ற செற் கணக்கில் ஜெனீபர் கேப்ரியாட்டியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றார்.



**SABBY Driving school**

Keel / lawrence Area

G1 & G2 பயிற்சி வகுப்புகளும், வெகுவிரைவல் வீதிப் பரிட்சையும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.


அழையுங்கள் : K. பேரின்பம்

416-256-9957



**NTE AUTO**

New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 13வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair



SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாமும் நமது இல்லமும் - 186

## U.K வட்டிவீதத்தை அதிகரிக்கின்றது

மே 6ஆம் திகதி, United Kingdom வட்டிவீதத்தை 1/4%ஆல் அதிகரித்துள்ளது. இதனை U.K மத்திய வங்கியின் வட்டிவீதம் 4 1/4 வீதமாக அதிகரித்துள்ளது. கடந்த 2½ வருடங்களில் இதுவே அதிகூடிய வட்டி வீதமாகும். ஆனால் பல நாடுகளைக் கூட்டாகக் கொண்ட ஐரோப்பிய மத்தியவங்கி வட்டிவீதத்தில் மாற்றம் ஏற்படுத்தாமல் 2% ஆகவே விட்டுள்ளது.


**ராஜா மகேந்திரன்**


### ஏப்ரல் மாதத்தில் வீட்டின் விலை மாற்றம்

ஏப்ரல் 2004 மாதத்தில்; ஏற்கனவே நிர்மானிக்கபட்டு மக்கள் வாழ்ந்த வீடுகளின் (Re-sale Home) விலை அதிகரித்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் வீட்டின் சராசரி விலை $321,131 ஆக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு கடந்த வருடத்தில் இதே மாதத்தின் வீட்டு விலையை விட $30,000 (Approx.) அதிகமாகக் காணப்படுகின்றது. (April 2003, சராசரி விலை $2,92,783) அத்துடன் கடந்த வருடத்தில் ஏப்ரலில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 7,307 ஆகக் காணப்பட்ட போதும், இந்த வருடம் ஏப்ரலில் 9,168 வீடுகள் விற்கப்பட்டுள்ளது. இது கடந்த வருட ஏப்ரலைவிட 25% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

2004 ஏப்ரல் மாதத்தில், விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை இதுவரை விற்கப்பட்ட மாதமாக வீடுகளின் எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்படுகின்றது. இருந்தும், புதிதாக விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையில் இறக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

Single Family Dwelling Sales Comparison







TORONTO REAL ESTATE BOARD

மேலும் இந்த ஆண்டின் (2004), முதல் நான்கு மாதங்களிலும் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை அதிகரித்தே வருகின்றது. இதற்கு ஏற்கனவே இருந்த குறைந்த வட்டிவீதமும் காரணமாக இருக்கலாம். மற்றும் வீட்டின் சராசரி விலையும் சரித்திரத்திலே அதிகூடியதாகக் காணப்படுகின்றது. (சராசரி வீட்டுவிலை $310,458)

1989ஆம் ஆண்டு ஏற்பட்ட அதிகூடிய சராசரி விலை $273,698. பின்பு இறக்கம் ஏற்பட்டது யாவரும் அறிந்ததே. அண்மையில் வட்டிவீதத்தில் ஏற்பட்ட ஏற்றம், வீட்டு வியாபாரத்தில் எவ்விதமான மாற்றங்கள் ஏற்படுத்தும் என்பதனை எதிர்வரும் ஆக்கங்களில் ஆராய்வோம்.

Raja M. Mahendran, P. Eng.
Broker/ Owner
Office - 416- 321-6969
Direct: 416 315-9397
Email: raja@mahendran.ca


### Interest Rate


| | |
|---|---|
| 5 Yrs Mortgage | 4.69% |
| 3 Yrs Mortgage | 4.14% |
| Prime Rate | 3.75% |
| Bank Rate | 2.00% |

## அறிவுக் கேள்விகள் ஆறு

1. சூரியனிலிருந்து ஒளிக்கதிர்கள் பூமியை அடைய எவ்வளவு நேரமாகும்?
2. இந்தியாவில் உள்ள எந்தக் கட்டிடத்தின் மேலே எந்த விமானமும் பறக்கக் கூடாது?
3. குழந்தைகள் எத்தனை மாதம் கண்ணீரின்றி அழும்?
4. பூமி அதிர்ச்சியை அளக்க உதவும் கருவி எது?
5. மண் புழுவிற்கு எத்தனை கண்கள்?
6. கிரிக்கெட்டில் எத்தனை ஸ்டம்புகள் பயன்படுத்தப்படுகின்றன?

1. எட்டுநிமிடங்கள்
2. தாஜ்மகால்
3. மூன்று மாதங்கள்
4. மெர்கல்லி ஸ்கேல் (Mercalli Scale)
5. கண்களே இல்லை
6. ஆறு











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமனசிகிச்சை
# (Homeopathy)



உலகில் விசித்திரமானமுறையில் நோய்களை குணப்படுத்த வல்ல நவீன சிகிச்சைமுறை எனக்கருதப்படும் இந்த சமனசிகிச்சை "ஹோமியோபதி" வைத்தியமுறை ஒரு ஜேமனியரால் 18ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டது. ஜேமனியைச் சேர்ந்த டாக்டர். சாமுவல் ஹன்மன் *(Dr. Samuel Hahnemann)* ஒரு பிரபல வைத்திய சாலையில் வைத்தியப்போதனாசிரியராகவும், அத்துடன் முறைப்படி வைத்தியம் செய்து நோயாளிகளைக்குணப்படுத்தினார். வைத்திய நிபுணராகிய அவர் தாம் குணப்படுத்தும் நோயாளிகள் நோய் நீங்கியபின்பு அதிகம் பெலயீனமாக இருந்ததை அவதானித்தார்!. அதி விவேகியாகிய அவருக்கு இது மிகவும் அதிருப்தியாக இருந்தது!. வரும்போது நோயால் பீடித்திருந்தாலும் நோயாளி உற்சாகமாக இருந்ததையும் பின் நோய் குணமாகிப்போகும் பொழுது அவர்கள் மிக பெலயீனமாக இருந்ததும் தாம் நோயாளிக்கு



உதவி செய்வதற்குப் பதில் தீமைசெய்வதாக இருந்தமை அவர் மனதை வெகுவாக உறுத்தியது!. அக்காலத்தில் மலேரியா வுக்கு "குயினையின்" மருந்தே அதிகம் பாவிக்கப்பட்டது. இந்த அதிவிவேகியாகிய டாக்டர் ஹன்மன். மலேரியாவைக் குணப்படுத்தும் "குயினையின்" அந்த அறிகுறிகள் உள்ள நோயை தோற்றுவிக்கிறதோ' எனச் சந்தேகித்தார்!.அவர் தானே தினந்தினம் சிறிய அளவு "குயியைினை்" உட்கொண்டார்!, சில நாட்கள் இப்படி உட்கொண்டதும் அவருக்கு குளிருடனும் நடுக்கத்துடனும் சுரம் தோன்றி அது வியர்வையுடன் நீங்கியது, குயினையின் எடுப்பதை நிறுத்தியதும் அறிகுறி தோன்றுவது நின்றுவிட்டது!. எனவே அவரது சந்தேகம் வலுவடைந்தது இதன்பின் தம்முடன் வேலைசெய்யும் பல சுகதேகிகளுக்கும் இந்தக் "குயினையினை" தினந்தினம் கொடுத்தார். அவர்களுக்கும் குளிருடன் ஆரம்பித்த சுரம் வியர்வையுடன் நீங்கியது!. இதிலிருந்து அவர் ஒரு திடமான முடிவிற்கு வந்தார்.

அதாவது "ஒரு மருந்து நோயை குணப்படுத்துவதன் காரணம், அந்த மருந்து ஒரு சுகதேகிக்கு அது குணப்படுத்தும் நோயின் அறிகுறிகளை தோற்றுவிக்கும் தன்மை உள்ள காரணத்தால்" என்னும் உண்மையாகும்!., *A remedy cures a disease because it is capable of producing the symptoms exhibited by the disease in a healthy Organism,* இதன்முறைப்படி ஏராளமான மருந்துகள் சுகதேகிகளுக்கு

## டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், PH.D
## வவுனியா, இலங்கை

கொடுக்கப் பட்டு அவை சுகதேகிகளுக்கு ஏற்படுத்தும் அறிகுறிகளை விபரமாக கவனித்து அவற்றை ஓர் அகராதியில் குறிப்பிடப்பட்டது. இப்படியாக பரீட்சைக்கு உட்படுத்துவதை "மருந்து பரீட்சை" *(Drug Proving)* என்பர். இவ்விபரங்களை குறிப்பிடும் அகராதியை "ஹோமியோபதி மரீறியா மெடிக்கா" *(Homeopathic Materia Medica)* என்பர். இப்படிப் பரீட்சித்த பல்லாயிரம் மருந்துகள் இந்த மரீறியா மெடிக்காவில் உள்ளன. இந்த மருந்துகள் ஒரு சுகதேகிக்கு அவரது உடம்பில் ஒவ்வொரு பாகத்திலும் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் யாவும் மிகவிபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு நோய் எந்தப் பாகத்தைத் தாக்கியிருக்கிறதோ அதற்கு ஏற்ப தகுதியான மருந்தை தேர்ந்தெடுத்து மிகக் குறைந்த வீரியத்தில் கொடுத்தால், அந்த நோய் உடம்பின் நோய் எதிகும் சக்தியுடன் செயற்பட்டு விரைவில் நோயை நீக்கிவிடும் என்பது பலர் அனுபவத்துட னும் ஆராட்சிகள் மூலமும் கண்டறிந்த உண்மையாகும்!. இந்த மருத்துவத்தில்



கையாளப்படும் முறை "சமன சிகிச்சை முறை" எனப்படும். இதன் பிரகாரம் ஒற்றுமையுள்ள ஒன்று அதே தன்மையுள்ள இன்னொன்றை குணப்படுத்தவல்லது என்பதாம்! இந்தச் சட்டங்கள் யாவும் ஒரு "ஹோமியோபதி சட்ட ஏட்டில்" பதியப் பட்டுள்ளது. இது ஆங்கிலத்தில் Œ *Organon of Homeopathy* எனப்படும்.


**MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள்
**டாக்டர் ஜே. மோகன்**

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAPY
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM


HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | |
|---|---|
| Cough | Flu |
| Depression | Anxiety |
| Asthma | Tonsillitis |
| Gout | Arthritis |
| P.M.S | Leucorrhea |
| Migraines | Hair Loss |
| Diabetes | Cystitis |
| Cancer | Prostatitis |
| Obesity Hemorrhoids | |
| Stumatitis | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/ 416-291-3022

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4



**யோகா சோதிடம்**

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- பலன் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

**416-299-8361**

**ACTION HONDA**
*"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"*



**புதிய பழைய HONDA வாகனங்களை ஈழத்தமிழ் மகன் சோதீஸ் இடம் பெறும்போது**

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.



*June 30 2004* **வரையும் புதிய பழைய வாகனங்கள் வாங்குபவர்களிற்கு பல்லாயிரம் பரிசில்கள் காத்திருக்கின்றன.**

**416-704-1179**

**அலுவலக நேரம்**
**Mon, Fri, Sat: 9 am - 6 pm**
**Tues, Wed: 12 noon - 9 pm**
**4334 Kingston Rd, Scarborough**




**திருமண சேவை**

உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன் மணமகளைத் தெரிவு செய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள் எமது சேவையின் பலனைப் பெற்ற தம்பதிகள் பலர்/ எம்மவர்களின் தேவையே எமது சேவை.

அழையுங்கள்: 416-261-6219

Weekly After 6:00PM / Weekends Anytime



**YARLCAN**
**STEAM CLEANING**

- **DUCT CLEANING**
- **CARPET CLEANING**

உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்-

மோகன்: (905) 887-7436
**Cell:** (416) 721-9709







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாச் சிதறல்கள்

**2003 ஆம் ஆண்டின் சிறந்த கலைஞர்கள்**

மெடிமிக்ஸ் - தினகரன் 2003ஆம் ஆண்டின் சிறந்த கலைஞர்களுக்கான விருது வழங்கும் விழா சென்னை ராயப்பேட்டை யிலுள்ள YMCA மைதானத்தில் கோலாகலமாக நடந்தது.



சினிமா உலகில் சாதனை படைத்ததற்கான விருதினை நடிகர் ஜெமினிகணேஷன், நடிகை சரோஜாதேவி ஆகியோர் பெற்றனர். ஜெமினி கணேசனுக்கு டைரக்டர் கே. பாலச்சந்தர் பொன்னாடை அணிவித்து, தங்கப்பதக்கம் அணிவித்து வாழ்த்தினார். நடிகர் விஜயகுமார் கேடயம் வழங்கினார். நடிகை சரோஜாதேவிக்கு பட அதிபர் ஏவி. எம். சரவணன் திரைப்பட விநியோகஸ்தர் கள் சங்க தலைவர் சிந்தாமணி எஸ். முருகேசன் வழங்கினார்கள்.

## பரம்

சிறந்த நடிகர் விக்ரமுக்கு (பிதாமகன்) சரத்குமார் எம். பி. வழங்கினார். சிறந்த நடிகை சினேகாவுக்கு (பார்த்திபன் கனவு) நடிகை ராதிகா சரத்குமார், மெடிமிக்ஸ் நிர்வாக இயக்குனர் பிரதீப் இணைந்து விருதுகளை வழங்கினார்கள். சிறந்த இயக்குனர் பாலாவுக்கு (பிதாமகன்) மெடிமிக்ஸ் நிர்வாக இயக்குனர் வழங்கினார். சிறந்த இசை அமைப்பாளர் தினாவுக்கு (திருடா திருடி) நடிகை ரீமாசென் வழங்கினார்.

சிறந்த பாடலாசிரியர் வைரமுத்துவுக்கு (இயற்கை) டைரக்டர் சேரன் அளித்தார். சிறந்த பாடகர் ஹரீஸ் ராகவேந்தர் (பாடல் தேவதையைக் கண்டேன்) நடிகர்கள் சிபிராஜ், அருண்குமார் வழங்கினார்கள். சிறந்த பாடகி மாலதிக்கு (பாடல். மன்மதராசா) பட அதிபர் அ.செ. இப்ராகிம் ராவுத்தர் வழங்கினார். சிறந்த ஒளிப்பதிவாளர் பாலசுப்பிரமணியத்துக்கு (பிதாமகன்) பி.சி. ஸ்ரீராம், நடிகை விந்தியா வழங்கினார்கள்.

சிறந்த நகைச்சுவை நடிகர் கருணாசுக்கு (திருடாதிருடி) நடிகை குஷ்பு வழங்கினார். சிறந்த குணச்சித்திர நடிகர் ரகுவரனுக்கு (திருமலை) நடிகர் ஸ்ரீகாந், பட அதிபர் பி.எல் தேனப்பன் வழங்கினார்கள்.



குணச்சித்திர நடிகை சங்கீதாவுக்கு (பிதாமகன்) பட அதிபர் ஜி. தியாகராஜன், நடிகர் ஷாம் வழங்கினார்கள். சிறந்த வில்லன் நடிகர் ஜீவன் (காக்க காக்க) நடிகர் நெப்போலியன் எம். எல். ஏ, பட அதிபர் சித்ரா லட்சுமணன் வழங்கினார்கள். சிறந்த கதாசிரியர் கே. பாக்யராஜுக்கு (சொக்கத்தங்கம்) பட அதிபர் ஆர்.பி சௌத்ரி, நடிகை மும்தாஜ் விருது வழங்கினார்கள். சிறந்த புதுமுக இயக்குனர் செல்வராகவனுக்கு (காதல்கொண்டேன்) நடிகர் தனுஷ், நடிகை நதியா வழங்கினார்கள். சிறந்த வசனகர்த்தா ஹரிக்கு (சாமி) இசையமைப்பாளர் பரத்வாஜ், தயாரிப்பாளர் கே. ராஜன் ஆகியோர் விருது வழங்கினார்கள்.



சிறந்த நடன இயக்குனர் சிவசங்கருக்கு (திருடா திருடி) நடிகர் விக்னேஷ், நடிகை ஸ்ருதிகா வழங்கினார்கள். சிறந்த ஸ்டண்ட் இயக்குனர் ஸ்டண்ட் சிவாவுக்கு (பிதாமகன்) நடிகை ஸ்ரீமன், நடிகை கனிகா வழங்கினார்கள்.

சிறந்த ஆர்ட் டைரக்டர் எம். பிரபாகரனுக்கு (அன்பேசிவம்) நடிகர் ஜெய் ஆகாஷ், நடிகை உமா விருது வழங்கினார்கள். சிறந்த குழந்தை நட்சத்திரம் கல்யாணிக்கு 'ஐஸ்' பட புகழ் அசோக், நடிகை அபர்னா விருது அளித்தனர். சிறந்த பி.ஆர். ஓ பாலனுக்கு எஸ். ஏ. சந்திரசேகரன், ஷோபா விருது வழங்கினார்கள்.



சிறந்த கலைபடத்துக்கான விருதினை லட்சுமி மூவி மேக்கர்ஸ் தயாரித்த அன்பேசிவம் பெற்றது. அதற்கான விருதினை பட அதிபர்கள் கே. முரளிதரன், வி. சுவாமிநாதன், ஜி. வேணுகோபால் ஆகியோருக்கு இயக்குனர் கஸ்தூரிராஜா, ரமேஷ்கண்ணா ஆகியோர் வழங்கினார்கள். நிகழ்ச்சியை ஐ. லியோனி, காயத்ரிப்ரியா தொகுத்து வழங்கினார்கள்.

நடிகைகள் ரீமாசென், தியா, பிரியாமணி, தேஜாஸ்ரீ, சாயாசிங் ஆகியோரின் கண்கவர் நடன நிகழ்ச்சிகளும் மற்றும் ய. கே. முரளியின் இன்னிசை நிகழ்ச்சியும் புட்நோட்ஸ் குழுவினரின் அறிமுக நடனநி கழ்ச்சி, மனோ மிமிக்ரி, நாகிட் ரம்ஸ் இசை ஆகியன நடந்தன. மாணிக்கவிநாயகம், மஹதி பாடல்கள் பாடினார்கள்.

விழாவில் உயரதிகாரிகள், தொழிலதிபர் கள், திரையுலகப்பிரமுகர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். விழா நடந்த வை. எம். சீ. ஏ மைதானம் ரசிகர்கள் கூட்டத்தில் நிரம்பி வழிந்தது. சிறந்த கலைஞர்களுக்கான விருதுகள் வழங்கிய போது கண்கவர் வாண வேடிக்கைகளும் இடம் பெற்றன.

- நன்றி. தினகரன்.


**SHAN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL**



**பயிற்சி நிலையம்**



*5 Lessons for $299*

*10 Lessons for $499 ( 1 Road Test Free)*

*20 Lessons For $899 ( Including 2 Road Test Free)*



சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: **Pl. Call: Raja / Shan**

**Tel: 416-525-7958**

**40 NUGGET AVE., #8, Scarborough East End**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவைத் தொடர்....




# ராசம்மா ராச்சியம்





107






ஆட்டிலறி அன்னம்மா அரைத்தூக்கத்திலிருக்க செக்கண்ட்புளோர் செல்லம்மா மட்டும் அன்னம்மாவின் பேரனின் பிறந்தநாள் (Birthday) வீடியோ கொப்பியைப் பார்த்து குழம்பிப்போயிருந்தா. அன்னம்மாவின் ஒன்றுவிட்ட சகோதரர் வெலஸ்லி வேலாயுதம் அந்த பிறந்தநாள் வீடியோக் கொப்பியில் இருந்தார். செக்கண்ட் புளோர் செல்லம்மாவின் குழப்பத்திற்கு காரணம்: 3வருடமாக ஆட்டிலறி அன்னம்மா குடும்பமும் வெலஸ்லி வேலாயுதம் குடும்பமும் அமெரிக்கா ஈராக் லெவலில் சண்டை. 2, 3 தரம் பொலிஸ் வெலஸ்லி வேலாயுதத்தை கைது செய்தது. இன்னும் பகை ஓயவில்லை. எப்படி, இந்த பிறந்தநாளில் கலந்து கொண்டான்.





போனகிழமையும் சித்திராபௌர்ணமிக்கு கோயில்லை வெலஸ்லி வேலாயுத்தை கண்ட போது, அண்மையில் இலங்கையில் தேர்தல் கூட்டத்தில் கண்ட தேரோ போல தலை மொட்டை. ஆனால் எப்படி இந்த வீடியோ கொப்பியில் நல்ல தலை நிறைய அந்தக்கால சத்தியராஜ் போல அடர்ந்த தலைமுடியுடன் வெலஸ்லி வேலாயுதம் நிக்கிறான். ஒன்றுமே புரியவில்லை. திடீரென அதே கொப்பியில் வேலாயுதத்திற்கு பக்கத்தில், இஞ்சினியர் ராமநாதன் நின்றது செல்லம்மாவிற்கு அதிர்ச்சி கூடியது. இஞ்சினியர் ராமநாதன் இறந்து 2வருடம் முடிந்து விட்டது. ஆட்டிலறி அன்னம்மாவின் நித்திரையை குழப்பாமல் மெல்லிய குரலில் உலகண்ணை உலகண்ணை உந்த இஞ்சினியர் ராமநாதன் என்னண்டு போனகிழமை பார்த்த வீடியோக் கொப்பியிலை? உலகர், ஈராக் சிறையில் முஸ்லீம்கள் உடையின்றி சித்திரவதை செய்யப்பட்டதை பற்றி கேட்ட போது ஜோர்ஜ் புஸ் புன்னகைத்து விட்டு சொறி (Sorry) என பதில் சொல்வது போல சொன்னார். செல்லம்மா எத்தனை சினிமாப்படம் பாத்தனி? எதிரி, நண்பன், கில்லி, குத்து என செல்லம்மா அடுக்கிக் கொண்டே போனா.









எத்தனை எடிட்டிங் செய்யிறாங்கள். நயினாதீவிலை நடக்கிற கலியாண வீட்டிலை பெம்புளை, மாப்பிளையை நைகரா நதியிலை குளிக்கிறமாதிரி படம் எடுக்கிறார்கள். அது மாதிரி 4, 5 வருடத்துக்கு முதல் எடுத்த வீடியோப்படம் எடிட் பண்ணியிருக்கினம்.

உந்தக் கொப்பி ஊர்காவற்துறைக்கும், இத்தாலி, பிரான்ஸ்க்கு அனுப்பேக்குள்ளை தாங்கள் இஞ்சை ஒற்றுமையாக இருக்கிற மாதிரிக் காட்டத்தான் என்றார் உலகர்.



உலகப்பு உலகப்பு என்றபடி சந்தோசத்துடன் வந்தான் பிறிம்லி மீனாவின் மகன். உலகப்பு யூ நோ விக்ரோறியா டே. லோங் வீக்எண்ட் - Fireworks வெடி கொழுத்தி என்யோய் பண்ணலாம் என்றான்.

ஆட்டிலறி அன்னம்மா திடுக்கிட்டு எழுந்தா, பேர்த்தே வீடியோ இன்னும் முடியவில்லை. வெலஸ்லி வேலாயுதம் நிற்கும் காட்சிதான் போய்க் கொண்டிருந்தது. கண்ணில் தானாகவே கண்ணீர் கசிந்தது, கண்ணைத் துடைக்கும்போது செல்லம்மா பார்க்கத் தவறவில்லை. என்ன அன்னம்மாக்கா என்று செல்லம்மா கேட்க தன்னைச் சமாளித்துக்கொண்டு நேற்று வெய்யிலுக்குள்ளை நடந்தது கண் எரியுது என்றா அன்னம்மா.



**மனசு என்னதான் மறக்க நினைத்தாலும் கலங்கும் கண்கள் மறக்க மறுக்கிறது.**



- கலகலப்பு தீசன்


செந்திியின் தமிழன் வழிகாட்டி வழங்கும்

## வர்த்தகச் சோலை - 2004

*South Asian Trade Show May 15 & 16, 2004 - Saturday & Sunday*
*11am to 10pm @ Downsview Park*

*Free Entry for Seniors & Kids Under 12*
*Free Parking* அழையுங்கள்: 416-615-4646

Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்



பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்

## "நீலம் சில்க்"

- *SONALIKA PURE SILK*
- *JARDHOSHI SATIN & CREPE SILK*
- *JAPAN CRYSTAL SILK*
- *JAIPUR CRYSTAL SILK*
- *VASUNTHARA NETWORK CREPE*

**T.P: 416-778-7455**
**Fax: 416-778-8484**
1453 GERRARD STREET, EAST
(INDIAN BAZZAR)

**T.P: 416-759-2002**
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

## ONTARIO FLOORING CO.

Free Estimate

- All types of Hardwood Floors Installed
- Old Floors Refinished
- All Workmanship Guaranteed



Over 30 years experience

Raja - 416-540-8626 Varathan - 416-267-5270

## ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12

Professional Photographer - கதிர்
**416 - 750 - 8118**

2381 Eglinton Ave., E.,
Kennedy / Eglinton, Scarborough



## தமிழர் நிர்வாகத்தில் ஒரு

# EM BASSY

**விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது ஆனால்**



- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

சமோசாவிற்கு அழையுங்கள்:
416-332-0944

Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough **4 1 6 - 3 3 2 - 8 4 5 1**

## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?



வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள்.
முற்றாக ஒழிக்க அழையுங்கள்.



- No Spraying
- No Smelling
- No Moving



**Call: Kanthan** **Tel: 416-291-3997**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறுவை 18

‘ஹலோ!’
‘வணக்கம் மாஸ்டர். ஒரு ஆலோசனை.’
‘உங்களுக்கு என்ன ஆலோசனை ஐயா. நீங்களல்லோ எங்களுக்கு ஆலோசனை வழங்க வேணும்.’
‘வைத்தியருக்கு வைத்தியம் பார்க்க இன்னொரு வைத்தியர் தேவைப்படுவது போல ஆலோசனை சொல்லுகின்றவருக்கு ஆலோசனை சொல்ல இன்னொரு ஆலோசகர் தேவைப்படுகின்றார்.’
‘அவ்வளவுக்கு நான் ஒன்றும் பெரிய ஆள் இல்லை. இருந்தாலும் சொல்லுங்கோ!’
‘நான் அடுத்த வருடம் ஓய்வு பெறப்போகிறேன். இவ்வளவு காலமும் வேலைப் பழு காரணமாகச்சமூகத்துக்கு எதுவுஞ் செய்யவில்லை. ஓய்வு பெற்றதன் பிறகு ஏதாவது செய்ய விரும்புகிறேன். என்ன செய்யலாம்?’
‘எமது சமூகத்துக்கு ஒரு சனசமூக நிலையம் வேணும் ஐயா. ஓர் அரங்கம், விளையாட்டு



மையம், விருந்தபசார அறை, நூல்நிலையம், கலாசார கூடம் போன்றவற்றை உள்ளடக்கிய தமிழர் சனசமூக நிலையம் ஒன்று இன்றியமை யாத ஒரு தேவை. யூக்கிரேனியர், யூதர், சீனர் இவ்விதமான சனசமூக நிலையங்களை அமைத்துத் தங்கள் சமூகத்தவரின் கலாச்சார தேவைகளை நிறைவேற்றி வருகிறார்கள். அந்தமாதிரித் தமிழுருக்கும் ஒன்று இருந்தால் நல்லாயிருக்கும்.’
‘ஒன்றல்ல, இரண்டு மூன்று இருந்தால் இன்னும் நல்லாயிருக்கும். உதை எனக்கேன் சொல்லுறியள்? எனக்கென்ன லொத்தரா விழுந்திருக்கு. என்னைப்பற்றி உங்களுக்குத் தெரியாதா? என்ன பகிடியே பண்ணுறியள்?’
‘கனடாவிலே காசு வைத்துக்கொண்டே ஆட்கள் வீடு வாங்குகினம்? இந்தச் சனசமூக நிலையத் திட்டத்துக்கு 40 மில்லியன் தேவையென்று சொன்னால், 10 மில்லியன் இருந்தாற் போதும் ஐயா. கட்டிடத்தை வங்கி ஒன்றில் அடகு வைத்து மிகுதிப் பணத்தை வட்டிக்கு எடுத்துத் திட்டத்தை முடிக்கலாம்.’
‘சரி. நல்ல திட்டம். 10 மில்லியனுக்கு எங்கே போகிறது? ஆண்டியள் கூடி மடம் கட்டின கதையாய்த்தான் இது இருக்குது.’
‘சும்மா இருக்கச் சோறு ஆகாது. தமிழரிடமிருந்து 10 மில்லியனையும் திரட்டலாம்.’
‘எனக்குத் தெரியும் நீங்கள் உது சொல்லுவியள் என்று. எனக்கு உது சரிவராது. எனது வாழ்நாளிலே எவரிடமும் சென்று ஐந்து சதத்துக்கேனும் கை நீட்டியது கிடையாது. இந்த வயதான காலத்திலே வீடுவீடாய்ச் சென்று தண்டச் சொல்லுறியளே. உதை விட்டுட்டு வேறு

## கவிஞர் வி. கந்தவனம்

ஏதுஞ் சொல்லுங்கோ.’
‘சரி, வீடு வீடாகச் செல்லவேண்டாம். வீட்டிலேயே இருந்தபடி இங்குள்ள புனர்வாழ்வுக் கழகத்துக்குத் தொலைபேசி மூலம் நிதி சேகரித்து உதவமுடியுமா?’
‘நிதியுடன் தொடர்பில்லாத வேறு சேவைகள் ஒன்றுஞ் செய்ய முடியாதா?’
‘செய்யலாமே. கோயில் தொண்டு செய்யலாம். கூட்டலாம் துடைக்கலாம்.’
‘எனது படிப்புக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றமாதிரி ஏதும் சொல்லமாட்டியள் போல.’
‘பிள்ளைகளுக்குப் பாடங்கள் சொல்லிக் கொடுக்கலாம் ஐயா!’
‘நான் படிச்சதெல்லாம் மறந்துபோனன். இனிப் புத்தகங்களைப் புரட்டவல்லோ வேணும்!’
‘தமிழ்ப் படிப்பியுங்கோவன். ஆனா ஆவன்னா சொல்லிக் கொடுக்கப் புத்தகங்களையும் புரட்ட வேண்டிய தில்லை. உங்கள் சேவையாலே நாலு பேர் என்றாலும் இந்த மண்ணிலே தமிழைப் பேசட்டும்.’
‘அது இங்கே எல்லோருந்தானே செய்யினம். படிப்பிக்கத் தெரியா தவையுமல்லே படிப்பிக்கினம்.’
‘அப்ப என்ன சேவை ஐயா தமிழருக்குச் செய்யப்போகிறீர்கள்?’
‘இன்னும் நாலுபேருடன் யோசித்துவிட்டுச் சொல்லுறன். வணக்கம்.’
‘வணக்கம்.’

பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்
சத்தியமும் வாங்கிப் போட்டாள் -
சகோதரரே
தாசிகள் நேசம் மோசமே - தொலை
பேசிகள் நேசம் வாழ்கவே!




# MANIKKANDAN


## Take Out & Catering

தமிழ் தாய் நினைவைக் கொண்டுவரும் தராதரமிக்க, கனடிய கோட்பாடுகளுக்கு அமைய எமது தயாரிப்புகளான சோறு, மரக்கறி, இறைச்சிக்கறி, கடலுணவு, கொத்துரொட்டி வகைகள், ரொட்டி, இடியப்பம், புட்டு, இட்டலி, தோசை, மசாலா தோசை, வடை, Rolls, Cutlets, Patties போன்ற பலவகை உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் **மணிகண்டன்**.



*Wedding or any Occasions*
*Special Deals Available*

- சுவை நிறைந்த பல்வேறு வகையான INDIAN SWEETS
- வீட்டில் தயாரிக்கப்பட்ட மாங்காய், தேசிக்காய் அச்சாறு



**இடியப்ப மெஷின் விற்பனைக்கு உண்டு.**




இல்லங்களில் நிகழும் பலவிதமான வைபவங்களுக்கும் தேவையான உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள

**மணிகண்டன்.** Pl. Call: Siva **416-283-1260**

*790 Military Trail , Unit 1A*
*Scarborough ON M1E 4P7*

# MORTGAGES

*Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below*



*LOW - LOW RATES AVAILABLE.*
*TO GET BEST RATE IN TOWN*
*PL CALL: ANIL JOSHI*

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply





**For more information call:**

**Anil Joshi** at

**416.888.1072**

# இசை வகுப்பு



*சங்கீத டிப்ளோமா பட்டம் பெற்று ஆசிரிய சேவையில் பல வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியையினால் வாய்ப்பாட்டு, வயலின் வகுப்புக்கள் ஆரம்பமாகி நடந்து கொண்டிருக்கின்றன. புதிய மாணவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். தொடர்புகளுக்கு திருமதி. த. பரந்தாமன் :* 416-293-3568 MIDLAND / FINCH

**தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்**

# ரவி நடராஜா

**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)



* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும். * உரிய இழப்பீடுகள் * மற்றைய இழப்பீடுகள் * விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

**(416) 245-6555**
**2095 Weston Road, Suite 203, Toronto, ON**
**(416) 755-2801**
**2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஆரோக்கிய வாழ்வு

N. செல்வசோதி

# உடல்வலி நீக்கும் யோகாசனங்கள்

இந்த நூற்றாண்டில் மனித சமுதாயத்தில் பெரும்பாலானோர் உடல் உழைப்பின்றி உணவு, உறைவிடம் மற்றும் இதரவசதிகள் அனுபவிக்கவே விரும்பு கின்றனர். ஆனால் உண்மையில் மனிதனைத் தவிர, பறவைகள், விலங்கு கள் போன்ற இதர உயிரினங்கள் அனைத்தும் தமக்கு இன்றியமையாத தேவையான உணவு முதலானவற்றைத் தாமே முயன்று தம் உழைப்பால் தேடிக்கொள்கின்றன. அதுவே ஒருவகை யான உடல்உழைப்புத்தான். எந்த ஒரு உயிரும், தனது அடிப்படைத்தேவையான உணவைத் தன்னுடைய உழைப்பின் மூலமாகப் பெறுவதே மனுதர்ம நியதியாகும். இதுவன்றி பிற வழிகளில் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது முறையற்ற செயலே. எனவே உடல் உழைப்பு என்பது மனித சமுதாயத்துக்கு அவசியமானதாகிறது. அத்தகைய உழைப்பும் உணவுத் தேடலைச் சார்ந்ததாய் இருப்பது சிறந்ததாகும். பொதுவாக விவசாயம், தோட்டவேலை, ஏற்றம் இறைத்தல், கிணற்றில் நீர் இறைத்தல், துணி துவைத்தல், மரம் ஏறுதல் போன்ற சுய தேவைத் தொழில்களைக்கூட செய்யாததால் தான் மனித உடலானது துருப்பிடித்த இரும்பைப் போன்றும், பட்டுப்போன மரத்தின் தோல் உரிவது போன்றும், உடலில் கழிவுப் பொருட்கள் தேங்கி நோயின் இருப்பிடமாகிறது. மேலும் சிறு அசைவுகள் கூட வலியைத் தருகிறது. எனவே மனிதன் ஆரோக்கியமாக வாழத் தனக்கு தேவையான முக்கியமான வேலைகளைத் தானே செய்யக் கடமைப்பட்டவனாகிறான்.

உடலில் வலி என்பது, தேங்கிய கழிவுப்பொருட்களின் அசைவை நாம் உணர்வதே. மண் வெட்டுதல், விறகு வெட்டுதல் போன்ற தொழிலில் கூட தினசரி உடல் உழைப்பின் காரணமாக, உடலினின்றும் கழிவுகள் வெளியேற்றப் படுவதால் உடல் வலி என்பது தொல்லை தராது. ஆரம்பத்தில் அனுபவம், பயிற்சி இன்மையால், எந்த ஒரு வேலையையும் செய்யும் போது தசைகள், நரம்புகள் முதலானவை புதிய விதத்தில் இயக்கப்படும் போது வலியை உணர்வது, உயிருள்ள உடலின் நியதி. உடல் என்பது இயற்கையின் உன்னத படைப்பு. அதில் உயிர்ச் சக்தியைப் பெருக்கி, நோயின்றி வைத்துக்கொள்வது நமது கடமை. இந்த வகையில் யோகாசனம் செய்வது என்பது தனிமனித உழைப்பு, ஆன்மீக தவம், மற்றும் மனித சமுதாய மேம்பாடு, நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு வழிவகுக்கிறது. யோகாசனத்தைக் கூட சிலர் மற்ற உடல் பயிற்சிகளைப் போன்று கடினமானதாக எண்ணுகின்றனர். யோகாசனம் என்பது சாத்வீக, ஆனமீக, தெய்வீகக் கலையாகும். எனவே இதர உடற்பயிற்சியைப் போன்று உடல் வியர்க்க விறுவிறுக்க களைப்படையும் வகையில் யோகாசனம் செய்யாது, இயல்பான கலாசத்தில் உள்ளுறுப்புகளில் நினைவை வைத்து, அமைதியாக மெதுவாக செய்வது அவசியமானதாகும்.

**இவ்வகையில் உடலை வலியின்றி பேணிக்கொள்ள அவசியமான ஆசனங்களுள்**

1. உட்கட்டாசனம்
2. அர்த்தகாடி சக்ராசனம்
3. பரிவர்த்தன திரிகோணாசனம்
4. குதபாதாசனம்
5. ஜானுசீராசனம்,
6. பச்சி மோத்தாசனம்
7. மகாமுத்ரா
8. பத்மாசனம்,
9. மார்ஜரி ஆசனம்
10. தனூராசனம்
11. நாவாய் ஆசனம்
12. விபரீத கரணி
13. சர்வாங்காசனம்
14. தண்டாசனம்



15, சாந்தி ஆசனம் முதலானவை உடல் வலியை நீக்குவதுடன், களைப்பையும், மனச்சோர்வையும் நீக்கி உடலில் உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும் அளிக்கிறது. எனவே மேலே கண்ட எளிமையான இந்த 15 ஆசனங்களை யாவது வாசகர்கள் தினசரி செய்து பயன்பெறலாம்.

• • •

# தூறல்

23ஆம் பக்கத் தொடர்ச்சி

## கனவு மெய்படவேண்டும்



ஜானகி விஸ்வநாதனின் இரண்டாவது படம். முதல் படம் "குட்டி" பல விருதுகளை பெற்றது. ஸ்ருதிகோ பவுண்டேசன் தயாரிப்பு. மறைந்த இசையமைப்பாளர் மகேஷ் இசையமைத்துள்ளார். ஒளிப்பதிவாளர் C.J. ராஜ்குமார். இவர் தங்கர் பச்சானின் பாசைறயில் வளர்ந்தவர். இதற்கு இப்படம் சான்று.

The Daily Times பத்திரிகை நிருபர் டெல்லியிலிருந்து தமிழ்நாட்டு மங்களபுரத்துக்கு அனுப்பப்படுகிறார். அங்கு "மகசேசே" விருது பெற்றவரை பேட்டி கண்டு செய்தித் தயாரிப்புக்காக விருதுபெற்ற Dr. மோகனின் மகள் தான் நிருபர். நிருபருக்கு இவ்விடயம் தெரியும். Dr.ருக்கு நிருபர் கூறிய பின்னர்தான் தெரியும். அதுவும் "வயிற்றில் நிறை மாத கர்ப்பிணியாய் இருந்த என் அம்மாவை ஏன் விட்டு விட்டு சென்றாய். நீ விருது பெற தகுதியுள்ளவனா?" என்ற கேள்வி கேட்ட பின்னரே. அவரது தாயை அதாவது தனது பாட்டியை சந்திக்கிறார் நிருபர். பாட்டியின் விபரிப்பில் படம் விரிகிறது.

மங்களபுரம் கிராமத்தில் நாட்டியக்காரியாக வாழும் ரம்மியா கிருஸ்ணனை பணம் சேர்க்கும் ஆசை காட்டி பட்டணத்துக்கு அனுப்புகின்றனர். தனது ஒரே மகனை விட்டு விட்டு, பட்டணம் செல்கிறாள். தாய் நீண்ட நாட்களாயும் திரும்பாதது கண்டு மகன் தாயை தேடி பட்டணம் செல்கிறான். பின்னர் சீர்திருத்தப்பள்ளிக் காப்பாளர் அவனை ஒரு வைத்தியராக படிப்பிக்கின்றார். அங்கு படிக்கும் லக்ஷ்மியை காதலித்து திருமணம் செய்கின்றார். நீண்ட நாட்களின் பின்னர் வைத்திய சேவை முகாம் ஒன்றிற்காக மங்களபுரத்துக்கு அருகாமையில் உள்ள கிராமத்திற்கு செல்கிறார். சென்றவர் மங்களபுரத்துக்கும் செல்கிறார். அக்கிராமமே பாலியல் பெண் தொழிலாளிகளால் நிரம்பிக் காணப்படுகின்றது.

பட்டணம் திரும்பிய அவரால் அந்த நினைவுகளிலிருந்து மீளமுடியவில்லை. பம்பாயில் கட்டாய பாலியல் தொழிலாளிகளாக்கப்பட்ட பல பெண்கள் காப்பாற்றப்பட்டு சென்னை வைத்தியசாலைக்கு மருத்துவ பரிசோனைக்காக கொண்டு வருகின்றனர். தற்செயலாக தனது வளர்ப்புத் தந்தையுடன் அங்கு செல்லும் அஸிம் சர்மா தனது தாயை சந்திக்கின்றார்.



அமெரிக்கா செல்ல ஏற்பாடுகள் செய்து கனவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அஸிம் சர்மாவின் மனைவியால் தாயை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைமாத கர்ப்பணியை அவளது பெற்றோருடன் விட்டுவிட்டு தனது மங்களபுரம் செல்கிறார். முழுக்கிராமத்தையும் பார்க்கிறார். இப்பொழுது மங்களபுரம் தேசிய உற்பத்தியை அதிகரிக்கும் கிராமங்களில் ஒன்று. அவரை எல்லோரும் "அப்பா" என்று அழைக்கின்றனர். அதே கிராமத்தில் பாலியல் தொழிலாளியாக வாழ்ந்தவர் இப்பொழுது பாராளுமன்ற உறுப்பினர். தனது செய்தித் தயாரிப்பு முடிந்து விட்ட நிலையில் பாட்டியை சந்தித்து விடைபெற்று விட்டு, அஸிம் சர்மாவிடம் வருகிறார். நித்திரை கொள்ளும் அவரை எழுப்புகின்றார். "Dr. Mohan" எழும்பவில்லை இறந்து விட்டார். இப்பொழுது நிருபர் "அப்பா" என்ற பெயரில் தனது தந்தையின் கதையை புத்தகமாக்கி அதே கிராமத்தில் தந்தையின் வழியை பின்பற்றுகிறார்.

நிருபராக "தனுவித்யார்த்தி". நிருபரின் தாயாக பிரபல மலையாள நடிகை "லக்ஷ்மி கோபிலாசுவாமி", Dr. Mohana Sundram ஆக அஸிம் சர்மா, அவரது தாயாக ரம்யாகிருஷ்ணன் நடித்துள்ளனர். இதில் அஸிம் சர்மாவும், அவரது வைத்திய நண்பனாக வரும் கார்த்திக் சிறிநிவாசனும் ஏற்கனவே மேடை நாடகங்களில் தோன்றி நடித்தவர்கள். அண்மைக் காலங்களில் சிறப்பான நடிப்பை இந்த மேடை நாடக நடிகர்களே வெளிக் கொணர்கின்றனர்.

ரம்யா கிருஷ்ணன் தனி அத்தியாயத்தை உருவாக்கியுள்ளார். தனு வித்யார்த்தியும் சிறப்பாக நடித்துள்ளார். 1950 களில் இருந்து தற்போதை காலகட்டம்வரை படம் பிடிக்கப்பட்டுள்ளது. காரைக்குடியை அண்டிய பகுதிகளில் பெரும்பகுதி படமாக்கப்பட்டுள்ளது.

### படத்தின் சிறப்பம்சங்கள்

* மூன்று பெண்கள் (தாய், மனைவி, மகள்) இவர்களது கருத்துக்களை உள்வாங்கி தனது பார்வையாக மாற்றியுள்ளார் Dr. மோகன் சுந்தரம். இங்கு Dr. மோகன் சுந்தரம் யார்? இயக்குனரும் ஆக்ககர்த்தாவுமாகிய ஜானகி விஸ்வநாதன். Times of India விற்கு அளித்த பேட்டியில் இவர் கூறிய கருத்து ஒன்று. "நான் Dr. மோகனசுந்தரத்தின் நிலையிலிருந்தால், நிச்சயமாக எனது தாய்க்காக நிறைமாத கர்ப்பிணியை விட்டு விட்டு வெளியேற்றிருப்பேன்"

* மூன்று பெண்களின் நிலையிலும், அவர்களை தாண்டிச் செல்லும் Dr. மோகன்சுந்தரம் என்ற நிலையிலும் ஜானகி விஸ்வநாதன் சவாரி செய்கின்றார்.

முதலாவது நிலை: Dr. மோகன்சுந்தரத்தின் மனைவி. ஒரு சராசரிப் பெண்ணின் கனவுகளை, தனது இலட்சியத்துக்காக சிதைப்பது சரியா? Dr இன் மனைவி இதை நினைத்து, நினைத்து புழுங்கி சாவதாக காட்டப்படுகிறது.

இரண்டாவது நிலை : அவரது தாய். தனது ஒரே மகனை விட்டு விட்டு பணம் சேர்பதற்காக பட்டணம் செல்கிறார். அவரது நிலை? சமூகம் சார்ந்த சமூகத்தின் மீதான பார்வை.

மூன்றாவது நிலை: மகள் நிருபர். தனது தாய் இறப்பதற்கு காரணமாய் இருந்தவர் தனது அப்பா. தனது வாழ்நாளில் தான் அப்பா என்றழைக்க எவருமற்ற நிலை. மங்களபுரமே தனது அப்பாவை "அப்பா" என்று அழைக்கும்போது இவரது மனதில் ஏற்படும் ஏக்கம் தாக்கமாக மாறுகிறது.

நான்காவது நிலை: Dr. - தனிமனித உறவுகளை விட சமூகமே முக்கியமானது. சமூகம் சார்ந்த சிந்தனைகளை வளர்க்க வேண்டும். அவர் மனைவியை விட்டுவிட்டு வந்ததற்கு தாயை விட மங்களபுரக் கிராமமே முக்கிய காரணம்.

இயக்குனர் உளவியல் ரீதியாகவும், சமூகம் சார்ந்தும், ஒவ்வொரு நிலையிலிருந்தும் விமர்சனங்களை வெளிக்கொணர்கிறார். மகனுக்குத் தாய் ஓம் எழுதக் கற்றுக்கொடுத்தல், பொட்டுக்கட்டுதல் நிகழ்வு எனப் பல இடங்களில் தனி முத்திரை பதித்துள்ளார் இயக்குனர்.

பாட்டுக்கள் தேவையற்றன ஆயினும் சமூக அடிமட்டம், உயர் மட்ட நிலைப்பாடுகளை இப்பாடல்கள் காட்டிநிற்கின்றன. கிராமத்தில் நிகழும் தொழில் மாற்றங்கள் ஆழமற்ற, மேம்போக்கானவையே. பாரதியாரின் கனவுகளை, ஆணின் திரைமொழியில், பெண்ணிய பார்வையில் சவாலாக சிறப்பாக பதிவு செய்துள்ளார். ஜானகி விஸ்வநாதன், ஆர். சி. சக்தியை, வசந்த ஒபய சேகராவையுடம் விட இவர் சிறப்பாகப் படைத்துள்ளார்.

இதில் குறிப்பிடப்பட்ட படங்களான "உணர்ச்சிகள்" Kennedy & Eglinton இல் அமைந்துள்ள ஜெயா Video - 416-759-9540 விலும் , " Maruthaya" - Midland & Ellesmere இல் உள்ள முருகன் புத்தகசாலையிலும் (416-285-9118), "ஏழாவது மனிதன் " - Jeya Video விலும் "கனவு மெய்படவேண்டும்" அனைத்து தமிழ்வீடியோ கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்கம்

## உலகமயமாதல் புதிய சவால்கள்

அமெரிக்க தேர்தல் வந்துவிட்டது. பல சவால்கள், போர், கைதிகள் மீதான வன்முறை இவற்றை மீறி இப்பொழுது Out Sourcing என்பது பற்றிய கவலை. இத் தேர்தலில் இடம் பெறவுள்ள முக்கியமான விடயங்களில் இதுவும் ஒன்று.

Out Sourcing





தீவிர வலது சாரிகள் புதியதொரு கோஷத்தை யும் முன் வைக்கின்றனர்.

"புலம்பெயர் ந்து வந்தோர் இங்குள்ள வர்களின் வேலையை பெறுகின்றனர்"

இவற்றை விட்டு பார்ப்போம்.

1. இந்த Outsourcing புலம் பெயர்வோ ரின் எண்ணிக்கையைக் குறைக்குமா?

2. இந்த தொழிலகுகளை மேற்பார்வை செய்யும் முகாமைத்துவ அதிகாரிகளாக செல்பவர்கள் இந்த மேற்குல வாசிகளே. இந்நிலையை Hyderabad இல் உள்ள IT Park இல் காணலாம்.

அமெரிக்க மற்றும் மேற்கு நாடுகளின் சில தொழில் அலகுகளை, இந்தியா போன்ற வளர்முக நாடுகளுக்கு மாற்றுவது. இதற்கான முக்கியகாரணம் தொழிலாளர் களுக்கு வழங்கபடும் வேதனம் இங்கு குறைவு. இது வளர்முக நாடுகளில் வேலை வாய்ப்பை அதிகரிப்பதுடன், மேற்கு நாடுகளில் பலரை வேலையிழக்கச் செய்யும். உ+ம். Call Centre Dell போன்ற கணினிகளை நீங்கள் வைத்திருந்தால் நீங்கள் இக்கணிணி கோளாறுகள் பற்றியோ அல்லது மேலதிக தகவல்கள் பெற வேண்டுமாயின், உங்களது தொலைபேசி யில் 1-800 ---- என்ற இலக்கத்தை அழுத்துவீர்கள். உங்களது குரலுக்கு பதிலளிப்பவர். Henry, Tom Ricky என குரல் கொடுப்பார். நீங்கள் அழைப்பது கனடா விலிருந்து, பதில் வருவது இந்தியா விலிருந்து.

**உலக மயமாதல் பற்றிய சிறுகுறிப்புக்கள் இப்பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெறும்.**

இந்நிலை வளர்முக நாடுகளிலும், மேற்கு நாடுகளிலும் பிரச்சினைகளை உருவாக்கி யுள்ளது. வளர்முக நாடுகள் இவ்வாறான தொழில் அதிகரிப்புக்காக, பல தொழி லாளர் உரிமைச் சட்டங்களை விட்டுக் கொடுத்துள்ளது. அதேசமயம் மேற்கு நாடுகளில் தொழிலாளிகளுக்கும், முகா மைத்துவக்குமான இடைவெளி அதிகரித் துள்ளது. ஆனாலும் மேற்குல நாடுகளின் வேதாந்தம் ஆன "Faster growth led to more jobs" என்ற பிரச்சாரம் தீவிர வலதுசாரிப் பொருளாதார ஆய்வாளர்க ளால் முன்வைக்கப்படுகிறது.

## - பதமி -

3. கர்நாடக, மற்றும் ஆந்திர முதலமைச்சர்கள் இவ்வாறான தொழிலகு கள் அதிகரிப்பில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். இதன் விடை தமது மாநிலத்தின் உண்மையான உற்பத்தியின் மீதான அக்கறை குறைகிறது. இது வர்க்கங்களிற்கு இடையிலான இடை வெளியை அதிகரிக்கிறது. இது மேலும் புதிய விரிசல்களை கொண்டு வருகிறது. புதிய வர்க்க வேறுபாடுகளை உருவாக் கிறது. பெரும்பாலும் இவ்வாறான தொழி லகுகள் (1) சேவை வழங்குபவையாக வும் (2) உற்பத்தியில் நேரடியாக பங்கு பற்றுபவையாகவும் உள்ளன.

4. Walmart போன்ற மிகப் பெரிய சில்லறை வியாபார நிறுவனங்கள், வளர்முக நாடுகளையே தயாரிக்கப்படும் பொருட் களையே சந்தைப்படுகின்றன.

5. வர்க்க வேறுபாட்டுடன் Rural - Urban Dichotomy உருவாக்குகின்றன.

6. வெற்றிபெறுவோருக்கும் தோல்வி அடை வோருக்குமான இடைவெளி அதிகரிக்கிறது. வெற்றிபெறுபவர்களாக மேற்குலக நாடுக ளும், அதன் முகாமைத்துவ தரகர்களும் காணப்படுகின்றனர். தோல்வியடைபவர்கள் சாதாரண தொழிலாளிகளும் நடுத்தர வர்க்கத்தினருமே. இதற்கான விடைகளை தேடிக், தேடிக், தேடிக் கொண்டே இருக்கும் அரசியல் வாதிகள் ஆதாயம் பெறுகிறார்கள். அவர்களது வாழ்க்கை காலம் அதிகரிக்கிறது.

இது வளர்முகநாடுகளுக்கோ, மேற்குலக நாடுகளுக்கோ ஆரோக்கியமானதல்ல.

| | |
|---|---|
| * எந்த நாடு முதன்முதலில் தக்காளியைப் பயிரிட்டது? | அயர்லாந்து |
| * வாகனங்களின் ரயர் தயாரிப்பில் பயன்படும் உலோகம் எது? | டெலூரியம் |
| * வலமிருந்து இடமாக எழுதப்படும் மொழி எது? | உருது |
| * ஹீலியம் என்பதின் பொருள் என்ன? | சூரியன் |
| * எவ்வளவு தூரத்தை கங்காருவால் தாண்ட முடியும்? | 12 மீற்றர் |





ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880


## பரிசுத்த ஆவிக்கு ஜெயம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடையின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிவாராக! என்வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதுக்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்கு பற்ற வேண்டுகின்றேன். உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்த 3 தினங்களுக்குள் இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்பவரின் தேவை நிறைவேறும். இச் செபத்தை பிரசுரிப்பதாக வாக்குப்பண்ணவும்.

ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ககுயாவின் கன்னிப் பிறப்பு

### இனப்பெருக்கத்தில் ஆண் இனத்தின் பங்கு தேவையற்று விட்டதா?

பெரும்பாலான தாவரங்களிலும், விலங்குகளிலும் இலிங்கமுறை இனப்பெருக்கத்தினூடே (sexual reproduction) முளையம் தோற்றுவிக்கப்பட்டு சந்ததி விருத்தி நிகழ்கிறது. இப்படியாகத் தோன்றும் முளையத்தில் பாதி நிறமூர்த்தங்கள் தந்தையிடமிருந்தும், பாதி நிறமூர்த்தங்கள் தாயிடமிருந்துமே கடத்தப்படுகின்றன. ஆனால் பல்வேறு தாவரங்களும், தேனீ, எறும்பு, சாட்டை வாற்பல்லி போன்ற விலங்கினங்களும் கருக்கட்டலின்றியே (unfertilized eggs) புதியதொரு உயிரினத்தைத் தோற்றுவிக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கின்றன. ஆனால் முலையூட்டிகள் (mammals) மட்டும் இதற்கு எப்போதும் விதி விலக்காகவே இருந்து வந்திருக்கின்றன. இதற்கான காரணம் என்னவென்றால் முலையூட்டிகளில் மட்டுமே காணப்படும் genomic imprinting எனப்படும் பரம் பரையலகுகளைப் பதிவு செய்யும் தனித்துவமான நிகழ்வாகும். ஆனால் அண்மையில் ஜப்பானிய ஆராய்ச்சியாளர்களால் Nature எனும் விஞ்ஞான இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஆராய்ச்சிக் கட்டுரை இந் நிகழ்வை பொய்ப்பித்து இருக்கிறது.



ரோக்கியோ யுனிவேர்சிற்றி ஒப் அக்ரிகல்ச்சர் (Tokyo University of Agriculture) ஐச் சேர்ந்த கலாநிதி ரோமோஹிரோ கோனோ (Tomohiro Kono) தலைமையிலான ஆராய்ச்சிக்குழு, ஆண் விந்துவின் உதவியின்றி, இரண்டு முட்டைக்கலங்களில் மட்டு மிருந்து புதியதொரு எலிக்குஞ்சை கன்னிப்பிறப்பு (parthenogenesis or virgin birth) மூலம் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த எலிக்குஞ்சின் பெயர் தான் ககுயா (Kaguya) என்பது ஜப்பானிய புராணக் கதைகளில் காணப்படும் ஓர் இளவரசியின் பெயர் -இவ் இளவரசி நிலவிலிருந்து தோன்றி ஒரு மூங்கில் மரத்தினுள்ளே பிறந்தார்). இது எப்படி சாத்தியம்? Genetic imprinting எனும் தடைகல்லைத் தாண்டி இதை எப்படி நிகழ்த்தினார்கள் என்பதைப் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

முலையூட்டிகளின் (மனிதன் உட்பட) பரம்பரையலகுத் தொகுதியில் காணப்படும் சுமார் 200 பரம்பரையலகுகளில் அவை தாய்வழி வந்தவையா அல்லது தந்தை வழி வந்தவையா என்பதை அடையாளம் காண்பிக்கு முகமாக வித்தியாசமான பதிவுகள் காணப்படுகின்றன. இந்த வித்தியாசமான பதிவுகளே genetic imprints அல்லது genetic modifications என அழைக்கப்படுகின்றன. இவ் வித்தியாசங்கள் DNA இழையில் அல்லது நிறமூர்த்த புரதங்களில் காணப்படும் சில இரசாயன மாற்றங்கள் மூலமாகவே ஏற்படுகின்றன. ஒரு கலம் தன் DNA தந்தைவழி பதிவு கொண்டதா அல்லது தாய்வழி பதிவு கொண்டதா என்பதை அதனுடைய நுணுக்கமான சுற்றாடலை வைத்தே நிச்சயிக்கிறது. சுற்றாடலில் எவ்வகைப் பதிவுகள் அதிகளவில் காணப்படுகின்றனவோ, அப் பதிவையே அக் கலமும் கொள்ளும். ஒரு கரு சரியாக வளர்வதற்கு முட்டையிலிருக்கும் தனித்துவமான பதிவுகள், விந்திலிருக்கும் தனித்துவமான பதிவுகள் இரண்டுமே அவசியம். ஒரு கருவிற்கு இரண்டுமே தந்தைவழி பதிவுகளாக இருப்பின், கருவைச் சுற்றியுள்ள இழையங்கள் (உதாரணமாக தொப்பூழ் நாண்) மட்டுமே வளரும் - கரு வளராது. அதே போல ஒரு கரு விற்கு இரண்டுமே தாய்வழி பதிவுகளாக இருப்பின், கரு மட்டுமே வளரும்- கருவைச் சுற்றியுள்ள இழையங்கள் வளர மாட்டாது. இந்த பதிவுகளில் ஏற்படும் கோளாறுகளே நரம்புத் தொகுதியைப் பாதிக்கும் நோயான பிரேடர்-வில்லி நோய் (Prader-Willie syndrome) மற்றும் ஆட்டிசம் (autism) எனும் வளர்ச்சிக்குறைபாட்டு நோய், சில வகை மூளைக்கட்டிகளின் காரணமாக இருக்கலாமென கருதப்படுகிறது.

ஜப்பானைச் சேர்ந்த கோனோவும் சக ஆராய்ச்சியாளர்களும் என்ன செய்தார்கள் எனின் ஒரு வகை எலிகளில் செயற்கையாக பரம்பரை அலகுகளை மாற்றி (genetically modified) அவற்றின் தாய்வழி வெளிப்பாடுகள் மிகக்குறைவாக இருக்குமாறு செய்தார்கள். இந்த பரம்பரையலகுகள் மாற்றப்பட்ட பெண் எலிக்குஞ்சொன்றின் சூலகத்திலிருந்து தந்தை வழி பதிவுகளை அதிகளவில் காட்டும் முதிர்ச்சியடையாத முட்டைகளை (தங்கள் சுற்றாடலை உய்த்தறிவதற்கு சந்தர்ப்பம் கொடுக்காது) அறுவடை செய்து, அவற்றை சாதாரண, முதிர்ச்சியடைந்த முட்டைக்கலத்துடனான புறக் கருக்கட்டல் மூலமே ககுயாவையும், இன்னுமொரு பெண் எலியையும் தோற்றுவித்தார்கள். பலவேறுபட்ட பரிசோதனை களுக்காக மற்றய எலியை பலி கொடுக்க வேண்டியதாயிற்று.
இப்போது சற்று விளக்கமாக எவ்வாறு பரம்பரையலகுகள் மாற்றப்பட்டன என்று பார்ப்போம். பதிப்பிக்கப்பட்ட பாகங்கள் (imprinted regions) நிறமூர்த்தங்களில் பரந்து காணப்படுகின்றன. அத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட பரம்பரையலகுகளின் தொழிற்பா ட்டையும் கட்டுப்படுத்துகின்றன. உதாரணமாக, Igf2 மற்றும் H19 ஆகிய இரு பதியப்பட்ட பரம்பரையலகுகள், எலிகளின் நிறமூர்த்தங்களிலே ஒன்றுக்கொன்று 7100 கிலோ அலகுகள் தள்ளிக் காணப்படுகின்றன.

“நுட்பம்” சஞ்சிகையை எளிதில் நாம் மறந்து விடமுடியாது. ஆயிரக்கணக்கான வாசகர்களை ஒரு குறுகிய காலத்துக்குள் ஆட்கொண்ட இந்த இதழ் நின்று போனது வருத்தமே.

மே 10ம் திகதி முதல் இந்த சஞ்சிகை இணைய இதழாக வெளிவருகின்றது என்ற மகிழ்சியான செய்தியை நாம் நமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். பல அறிவியல் கட்டுரைகளும் விபரங்களும் இந்த இணையத் தளத்தில் உள்ளன. அதிலிருந்து எடுக்கப்பட்ட கட்டுரையே இங்கு பிரசுரிக்கப்டுள்ளது.
மேலதிக விபரங்களுக்கு: www.nudpam.com

இந்த இரு பரம்பரையலகுகளும் ஒன்றுக்கொன்று எதிரான பதிவுகளைக் கொண்டவை - அதாவது தாய்வழி H19ம், தந்தைவழி Igf2மே வெளிக்காட்டப்படும். இந்த இரு பரம்பரையலகுகளுக்கும் இடையேயுள்ள பகுதி DMR (differentially methylated region) என அழைக்கப்படுகிறது. தாய்வழி பதிவுகளைக் கொண்ட பரம்பரையலகுகளில் காணப்படும் CTCF எனும் ஊக்கி-தடுக்கும் புரதம், DMR உடன் இணைந்து கொள்வதால், தாய் வெளிப்பாடு தடுக்கப்பட்டு, H19ன் வெளிப்பாடு மட்டுமே நிகழ்கிறது. ஆனால் தந்தைவழி பதிவுகளைக் கொண்ட பரம்பரையலகுகளில், இரு பரம்பரையலகுகளுக்கும் இடையேயுள்ள பகுதி CH3 கூட்டத்தைக் கொண்டிருப்பதால், CTCF எனும் ஊக்கி தடுக்கும் புரதத்திற்கு இணைய முடிவதில்லை. எனவே, இப் பரம்பரையலகுகளில் H19ன் வெளிப்பாடு தடுக்கப்பட்டு, Igf2ன் வெளிப்பாடு மட்டுமே நிகழ்கிறது. கோனோவும் சக ஆராய்ச்சியாளர்களும் என்ன செய்தார்கள் எனின் எலி வகையொன்றில் H19, DMR ஆகிய இரு பகுதிகளையும் நீக்கி விட்டார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடியே அவ் வகைப் பெண் எலி-யொன்றின் முதிர்ச்சியடையாத முட்டைகள் Igf2ன் வெளிப்பாட்டை மட்டுமே பெருமளவில் காட்டின (விந்துக் கலங்களைப் போல). அவற்றை சாதாரண, முதிர்ச்சியடைந்த முட்டைக்கலத்துடனான புறக் கருக்கட்டல் மூலமே ககுயாவையும், இன்னுமொரு பெண் எலியையும் தோற்றுவித்தார்கள். ககுயா தற்போது ஆரோக்கியமாக வளர்ந்து, இலிங்க முறை இனப்பெருக்கமூடாக குட்டிகளை ஈன்றுள்ளது.



தாய்வழி பதிவுகளைக் கொண்ட பரம்பரையலகுகளில் காணப்படும் CTCF எனும் ஊக்கி-தடுக்கும் புரதம், DMRஉடன் இணைந்து கொள்வதால், Igf2ன் வெளிப்பாடு தடுக்கப்பட்டு, H19ன் வெளிப்பாடு மட்டுமே நிகழ்கிறது. ஆனால் தந்தைவழி பதிவுகளைக் கொண்ட பரம்பரையலகுகளில், இரு பரம்பரையலகுகளுக்கும் இடையேயுள்ள பகுதி CH3 கூட்ட த்தைக் கொண்டிருப்பதால், CTCF எனும் ஊக்கி-தடுக்கும் புரதத்திற்கு இணைய முடிவதில்லை. எனவே, இப் பரம்பரையலகுகளில் H19ன் வெளிப்பாடு தடுக்கப்பட்டு, Igf2ன் வெளிப்பாடு மட்டுமே நிகழ்கிறது. கோனோவும் சக ஆராய்ச்சியாளர்களும் என்ன செய்தார்கள் எனின் எலி வகையொன்றில் H19, DMR ஆகிய இரு பகுதிகளையும் நீக்கி


நளினா நடராஜா

விட்டார்கள்.

இனி, மனித ஆண் குலத்தின் தொழில் போத்தல் மூடிகளைத் திறப்பதுடனும், உயரமான அலுமாரிகளிலிருந்து பொருட்களை எடுப்பதுடனும் முடிந்து விடப் போகிறதோ என்று அச்சப்படுகிறீர்களா? தற்போதைக்குப் பயம் தேவையில்லை. ஏனெனில் தொழில் நுட்பம் இன்னும் அவ்வளவு தூரத்துக்கு வளரவில்லை. கலாநிதி கோனோவின் மேற்கூறிய பரிசோதனையிலேயே 457 கட்டமைக்கப்பட்ட முட்டைக்கலங்களிலிருந்து இரண்டே இரண்டு எலிக்குஞ்சுகள் மட்டுமே உயிர் பிழைத்தன. இப்படி முற்றிலுமாகப் புரியப்படாத, சிக்கலான, தோல்வி வீதம் அதிகமான தொழில்நுட்பத்தை மனிதரில் பிரயோகிக்க எந்தவொரு அரசாங்கமுமே அனுமதி கொடுக்க மாட்டாது. எனவே, ஆண் குலமே, கவலையின்றி இரவில் உறங்குங்கள்- உங்கள் அழிவு (extinction) அவ்வளவு அருகில் இல்லை.

nalina@nudpam.com


DEBT & MORTGAGE SOLUTIONS !!



• கடன் தொல்லையா?
• கடன்காரர்களின் தொந்தரவா?
• Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

கவலைப்படாதீர்கள்! அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள். ராஜ்

தொலைபேசி எண் :416-835-6695

Call : 'RAJ' for all kinds of
Debt & Mortgage Solution
Lendingtree.ca






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



அன்பு விளைந்து பெருகும் தெய்வீகப் புனிதம் நிறைந்த பூமி எனது வாழ்வு என்பதை நான் உணர்ந்ததும், எனது வாழ்க்கை செழித்தோங்கும்.

சிற்சில சமயங்களில் மட்டுமே சந்தோஷமாகவும் ஏனைய நேரங்களில் துக்கத்துடன் துன்பம் அநுபவித்தபடி தொடர்ந்தும் அதே இடத்தில் அன்பில் லாது வாழ்வது சுலபமானதல்ல. உனது மனச்சாட்சி உனக்கு உணர்த்துவது போல், உன் தகுதிக்குகந்த மாதிரி அன்புடனும், மதிப்புட னும், மரியாதையுடனும் நீ நடத்தப்படாத இடத்தில் தொடர்ந்தும் "பரவாயில்லை, சமாளித்துத் தான் பார்ப்போம்", என்ற நம்பிக்கையுடன் நீ வாழ்வது அன்பு நிறைந்த வாழ்வு அல்ல. நாட்போகப் போக எல்லாம் தானாகவே சரியாகிவிடும்", எனும் நம்பிக் கையுடன், மற்றவர் உன்னை உடல் உள்ள உணர்வு பூர்வமாக துன்புறுத்த இடம் கொடுப்பது உன்னை நீயே நேசிப்பதாகாது,


## லலிதா புரூடி

சம்பந்தப்பட்ட மற்றவரை நீ நேசிப்பதாகவு மாகாது. உனக்கு அன்பு காட்டாத சொல், செயல்களில் மற்றவர்கள் ஈடுபட நீ அநுமதிக்கும் போது அவர்கள் உன்னைத் துன்புறுத்த உதவி, அன்பில்லாத வாழ்க் கைக்கு வழி வகுக்கிறாய். போக வேறு இடம் இல்லாதபடியால் இங்கேதான் நான் இருக்க வேண்டும் என நீ நம்பலாம். விஷயங்கள் இன்னும் மோசமடையலாம் அல்லது சிலவேளை சரிவரலாம் என நீ நினைக்கலாம். நீ உயர்வாகக் கருதுபவையை நீ நீயாகவே நலத்துடன் சுயத்தன்மையுடன் இருக்க உதவும் விஷயங்களை, உதாசீனப்படுத்தி உதறித் தள்ளிவிடுவது வெகுசுலபம். உனது தோல்விக்குக் காரணம் மற்றவர்கள் தான், உனது உணர்வுகளை மறுதலித்து அன்பிற்கு நான் பலிக்கடாவாகியுள்ளேன் என மறுகுவது சுலபமானாலும் இவை விவேகமான செயல்களல்ல. ஏனெனில் உனது அநுபவங்களிற்கும் அவற்றிற்குப் பதிலாகிய உனது செயற்பாடுகளிற்கும் கடைசியில் நீ தான் நிச்சயம் பொறுப்பேற்க வேண்டிவரும்.

அன்பு, தனக்காக நாமே எங்களை இழக்கச் சொல்லவில்லை. தீமை செய்யச் சொல்ல வில்லை. தியாகம் செய்யச் சொல்லவில்லை. நாம் கொடுப்பதை, அதே அளவில் எமக்குத் திருப்பித் தருகின்றது அன்பு. அன்புக்குப் பதிலாக அவமதிப்பு, அவமரியாதை, உடல் உள்ளத் துன்புறுத்தலுக்கு நீ உள்ளானால், நான் உண்மையாக அன்பைக் கொடுக்கி றேனா அல்லது இதை விட்டுப்போகப் பயப்படுகிறேனா என்று உன்னையே நீ கேட்டுக்கொள். உன்னை நீயே நேசிக்காததுடன் மற்றவர்களும் உன்னை நேசிக்கா திருக்க உதவியாக, ஒரு தூண்டுகோலாக இன்றுவரை நீ வாழ்ந்திருக்கலாம். அன்பின், அமைதி, சத்தியம், கீர்த்தி எனும் மேம்பாடுகள் உனை அரவணைத்துச் சூழ இன்று நீ அநுமதி கொடு. "நான் கொடுப்பதையெல்லாம் திரும்பப் பெறு கின்றேனா என்று உன்னையே நீ கேள்வி கேட்டுக்கொள்.

இல்லாவிடில் ஏன் அப்படி? அன்பில்லாத அநுபவங்களிலிருந்து என்னை விடுவித்து இனி என்னையே நான் நேசிக்க, மதிக்க இன்று முதல் நான் உறுதி பூண்டு கொள்கிறேன். சரியாக ஓடிக் கொண்டிருக்கும் வாழ்க்கைப் பயணம் சிலசமயங்களில் மாறி பிழையான திருப்பத்தை எடுத்து விடுவதுமுண்டு என்பதை நான் புரிந்து கொள்ளும் போது, நான் அன்பைப் புரிந்து கொள்வேன்.

உண்மையில் நீ யார் என்பதற்கு, உனது இதய உணர்வுகளுக்கு, உனக்குத் தெரிந்தவற்றிற்கு நீ முற்றும்முழுதாக ஆதரவளிக் காதது, உனது அன்பை வெளிப்படுத்தாது நீ கட்டுப்படுத்தி அடக்கி வைத்திருப்பதையே எடுத்துக் காட்டுகிறது. ஒவ்வொருவருக் குள்ளும் ஊறிப் பெருகும் அன்பை வெளிப்படுத்தல், அன்பைப் பகிர்ந்து கொள்ளல், அன்பைக் கௌரவித்தல் அனைத்தும் சரிவிகித சமான அன்புப் பரிமாற்றத்திற்கு அத்தியாவசியமானவை. இவற்றைக் கடைப்பிடிப்பது எமக்கு நாமே ஆதாரமாகி, எம்மை நாமே நேசித்து எமது சுயமதிப்பை உயர்த்தி நல்வாழ்வு வாழ்வதை நிரூபிக்கின்றது. இதை எமக்கு நாமே செய்யும்போது மற்றவர்களிற்கும் இதைச் செய்து பகிர்ந்து கொள்கிறோம். பிறரின்



மனதைப் புண்படுத்திப் பிரச்சினை உண்டாக்க விரும்பாது, எமது அன்பை, அந்த உண்மையை நாம் அடிக்கடி அடக்கி மறைத்து விடுகின்றோம். சில சமயங்களில் நாம் என்ன செய்கிறோம் என்பது எமக்கே புரிவதில்லை. ஆனால் எப்போது நாம் எப்படிச் செயற்பட வேண்டுமென்பது நன்கு தெரிந்தும் வேண்டுமென்றே எமது உணர்வுகளை வெளிக்காட்டாது மறைத்து, எமக்குத் தெரிந்த தகவல்களைப் பகிர்ந்து கொள்ளாது, எமது சுயரூபத்தை, எமது உண்மையான அன்பான சுபாவத்தைக் காட்டாது மறைத்துக் கொள்கிறோமோ, அப்போது எமது அன்பை எமக்குள் அடக்கி வீணாக்கி விடுகிறோம்.

உனது மானுடத்தின் மையத்துள் இருப்பது அன்பு. உனது ஆன்மீக அடையாளம் அன்பு. நீ கற்றுக்கொள்ளும் ஒவ்வொரு அநுபவமும், ஒவ்வொரு சந்திப்பும், ஒவ்வொரு பாடமும், அன்பை நீ இன்னும் கூடிய, இன்னும் சிறந்த முறையில் வெளிப்படுத்த உனக்கு உதவி செய்யும் வாழ்வின் பயிற்சி முறை தான். போலி முகமூடியுடன் வேஷம் போடாது, உனது உண்மையான சுபாவத்துடன் வாழ்ந்தால் தான் உனது அன்பை நீ தெளிவாக வெளிப்படுதலாம். அன்பு மகத்தான மாபெரும் சக்தி, அடிக்கடி சோம்பலிருந்து உலுப்பி எழுப்பி, நாம் செய்யப் பயந்து முடியாது என்றதைச் செயற்படுத்தும் ஒரேயொரு சக்தி அன்பு. ஒரு நாளில், உனக்குத் தெரிந்தோ, தெரியாமலோ, நீ மட்டும் தான் இன்னொருவரை சந்திக்கும் அன்பின் அடையாளமாயிருக்கலாம். அவர்களைப் புண்படுத்தலாம் என்று நினைத்து நீ கட்டுப்படுத்தி வெளிப்படுத்தாது விடும் அன்பு ஒன்று தான், அவர்களைக் குணப்படுத்திக் காப்பாற்றக்கூடிய சக்தி என்பதை நீ உணராது இருக்கலாம்.

உனது உணர்ச்சிகளையும் உனக்குத் தெரிந்தவற்றையும் நீ வெளிப்படுத்துவது உனது உறவுகளுக்குத் துன்பமாயிருக்கும், கஷ்டமா யிருக்கும் என இன்றுவரை நீ நினைத்திருக்க லாம். இன்று உனது அன்பை, உனது உண்மையான சுபாவத்தை மூடி நாம் செய்யப் பயந்து முடியாது என்று விட்டதை செய்யக்கூடிய ஒரேயொரு சக்தி அன்பு, மறைக்காது உனது உறவுகளுக்கு, வெளிப்படுத்தி, உனது அன்பை அவர்க ளுடன் பகிர்ந்து கொள். உனக்குத் தெரிந்தவற்றை அவர்களுக்குப் பாசத்துடன் வெளிப் படுத்து. அன்புடனும் அக்கறையுடனும் அவர்களை அணுகு. அன்பு, யாவற்றையும் ஒருங் கிணைத்து எல்லா வற்றையும் சரிசெய்ய வல்லது என்பதற்கு அத்தாட்சியாக, பயப்படாது உனது உண்மையான சுயரூபத்துடன் வாழப் பழகிக் கொள்.

**இன்று ஒரு தயக்கமும் இல்லாமல், நான் அவர்களை மனமார நேசிப்பதை எனது அன்புக்குரியவர்களுக்கு வெளிப்படுத்தி எடுத்துச் சொல்ல உறுதி கொள்கிறேன். எனது உள்உணர்வுகளை வெளிப்படுத்துவது எனது பலவீனம் எனும் பிழையான நம்பிக்கை யினால், கோபம் எனும் முகமூடியணிந்து எனது உறவுகளின் பாசப்பிணைப்பை நானே அறுத்தெறியும் பிழையை இன்று முதல் செய்யாது விட்டுவிடுகிறேன்.**


# SRI PARADISE Catering & Take -out

**416-269-4509 / 416-509-2454**

292 Markham Road, Scarborough, ON



## கோலாகலத் திறப்பு விழாவை முன்னிட்டு மலிவு விற்பனை

Special
திங்கள் - செவ்வாய்
கொத்து ரொட்டி
ஆடு Or மாடு Or கோழி
$-2.99

வாரத்தின் 7 நாட்களும்
100 இடியப்பம் $6.00
ரொட்டி 50¢

புதன் - வியாழன்
புட்டு Combo
Special
குழல் பிட்டு, மாசிச்சம்பல்,
நெத்தலி உருளைக்கிழங்கு குளம்பு
$-2.99

Special
வெள்ளி
மரக்கறிச்சாப்பாடு
5 மரக்கறி சலாட், பப்படம் ரசம்
மிளகாய்ப்பொரியல், அச்சாறு,
பாயாசம், வடை
$-4.50



வெள்ளி
Dinner Special
Special
மசாலா தோசை,
சாம்பாறு, சம்பல்
$-2.99

Special
சனி - ஞாயிறு
Lunch Special -வாழையிலைச் சாப்பாடு $-5.99
கோழி, ஆடு, மாடு, இறால், தண்டு or மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, மீன்பொரியல், கட்டைச்சம்பல்
கட்லட் உருளைக்கிழங்கு நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல்
Dinner Special
சிங்கப்பூர் நூடில்ஸ், தண்டூரி சிக்கன் $-3.99

Daily Special
மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு.
$-2.99
பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், Egg சம்பல், salad
$-2.99




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க



ராஜா மகேந்திரன்

# Raja M. Mahendran, P.Eng

Broker / Owner

Direct:(416) **315-9397**

HOMELIFE HIGHER STANDARDS

TRIDEL

**IN MISSISSAUGA**
BRAND NEW CONDOS FOR SALE
**TRIDEL BUILDERS**
1BED ROOM & 1+DEN
2BEDROOMS & 2+DEN
ALL WITH BALCONY
**PRICE START FROM $159,000**
OCCUPANCY DATE: SUMMER 2006





TRIDEL

## OPEN HOUSE ON SUNDAY, MAY 16, 3-5 PM

### ALLEN/SHEPPARD



**Asking $194,900**
2 Bedrooms, 2 Washrooms, 1 Kitchen,
Corner Unit, One Block To Subway

### MORNINGSIDE/ELLESMERE



**Asking only $ 129,900**
Stacked Town Home, 2 + 1Bedrooms
2 Washrooms, 1 Kitchen

### MARKHAM / EGLINTON



Asking Only $137,900
Spacious, 2 Bedrooms Condo
2 Washrooms, Excellent Location,
Great View

### MARKHAM/DENISON



**Asking $314,900**
Link-Two Story
3 Bedrooms, 3 Washrooms
1 Kitchen

### McCowan/16th Ave




Asking $289,900
BRAND NEW HOME
SEMI-DETACHED, 2 Story
3 Bedrooms, 3 Washrooms
Close To Mall, Library, TTC, Etc

### PHARMACY/LAWRENCE



**Asking $349,900**
DETACHED BUNGALOW, 3 + 2
Bedrooms, 2 Washrooms, 2
Kitchens, Separate Entrance.
$$$ Lots of Upgrades

### NEILSON / McLEVIN



Asking $269,900
Detached Backsplit, 4 + 1 Bedrooms,
3 Washrooms, 2 Kitchen

### MARKHAM/SHEPPARD



Asking $264,900
Two Story Link House, Excellent
Condition, Hardwood Floor Thru-
Out, 3+1 Bedrooms, 3 Washrooms,
Finished Basement

### HIGHGLEN/MIDDLEFIELD



Asking $464,000
New Detached Home 4 + 2 Bedrooms,
5 Finished Basement, Separate Entrance

### Toronto

Kennedy/Ellesmere

Excellent Home,
Detached 2-story,
4+2 Bedrooms, 6
washrooms, 3 Kitchens
2 Basement
Apartments, Lots of
Upgrades, Don't Miss
This One.



**Asking $509,000**



**Asking only $249,000**

### MISSISSAUGA

Morningstar/Airport

Dream Home, Large
backyard
Semi-Detached, 2-
Story, 4+1 Bedrooms,
3 Washrooms
2 Kitchens, Close to all
Amenities

**HOMELIFE/GTA Realty Inc., Real Estate Broker.** 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON. M1S 3Y3.
TEL: (416) 321-6969 email: raja@mahendran.ca FAX: (416) 321-6963




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

**Answers to Tutorial 145** May 01, 04




Ans. 1. 20t/ sin ∅ = 30t/ sin 135
∴ Sin ∅ = 20 Sin 135/ 30
∅ = 28˚, Destroyer Should travel in directions of N 62˚E.




Ans. 2. Δ AEC = 36
Δ CED = 108
Then Δ ADC = 144
∴ ΔABC = 288


Ans. 3 Let A represent the set of integers between 1 & 1000 that do not contain a 7, and An represent the set of n digit number that do not contain a 7,
Now $A_1$, ={ 2, 3,3,4,5,6,8,9} n $(A_1)$ = 7, n $(A_2)$ = 8 x 9 = 72
$n(A_3)$ = 8.9.9 = 648. n(A) = 7 + 72 + 648 = 727

Ans. 4. Four Switches can be arranged in $3^4$ ways.


Ans.5. Base be x cm X xcm and height h
$x^2h = 1000$ $h = 1000/x^2$
$A = x^2 + 4xh$ $A = x^2 + 400000/x$ for $x \geq 5$.
A' (x) = 2x - 400,000 / $x^2$ .>>>>> x = 27.14
Dimension base 27.14 and height 13.57 cm

## Tutorial - 146

1. If $2x^2 - 2xy + y^2 = 289$ where x and y are integers and $x \geq 0$, the number of different ordered pairs.(x,y) which satisfy the equation is.
(A) 8 (B) 7 (c) 5 (D) 4 (E) 3.




2. In the diagram, the equation of line AD is $Y = \sqrt{3}(x - 1)$
BD Bisects < ADC. If the coordinates of B are (p,q) what is the value of q.





3. A beams of light shines from points reflects off a reflector at point P, and reaches point T so that PT is perpendicular RS find x.

4. If 2 x $10^3$ is represented as 2 E3 on a calculator, how would the product of 2 ES and 3Ex be represented.

5. How many words with three, four or five letters can be formed if each word

*BY. MR. S.F.XAVIER (Teacher)* *TEL: 416-431-6774*


# மூன்றாவது சர்வதேச தமிழ்க் குறுந்திரைப்பட விழா



*மூன்றாவது சர்வதேச தமிழ்க் குறுந்திரைப்பட விழா வருகின்ற June மாதம் Toronto மாநகரில் நடைபெறவுள்ளது. இவ் விழாவுக்கு குறுந்திரைப்படங்கள் உலகெங்கும் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.*


* *பிரதிகள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி மே மாதம் 16ஆம் நாள்.*
* *படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.*
* *தேர்வுக்குழுவின் முடிவே இறுதியானதாகும்.*
* *பிரதிகள் அனுப்பவேண்டிய முகவரி: 4 Castlemore Avenue Markham, Ontario, L6C 2B3 Canada*
* *தொடர்புகளுக்கு 416-431-5095, 905-887-7457, email: movies@pathcom.com*
* *சிறந்த நெறியாள்கை, சிறந்த திரைப்படம், சிறந்த எடிட்டிங், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த திரைக்கதை ஆகிய பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படும்.*

*Art Film Society of Toronto*



# TUITION


DONMILLS & SHEPPARD பகுதியில்
முதலாம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரை
மாலை 4:00 மணியிலிருந்து 7:00 மணிவரை
ENGLISH & MATH ( ஆங்கிலம், கணிதம்) பாடங்கள்
சொல்லிக்கொடுக்கப்படும். **தொடர்புகளுக்கு: 416-502-2082**



# HOME VISIT TUITION


GRADE 6 - GRADE 12
MATH: CALCULUS, ALGEBRA, GEOMETRY, FINITE, PHYSICS
**PERSONAL TUTOR**
Lesley Antony, C.Tech
**தொடர்புகளுக்கு: 416-938-2860**
